வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 347 | பக்கங்கள் : 20



07
ராஜீவ் கொலை:
புலிகளுக்கு உதவிய
இந்திய - வெளிநாட்டு
சக்திகள்?



08
ரணிலின்
புதிய இன
நல்லிணக்க
முன்னெடுப்பின்
நோக்கம்



09
இலங்கையில்
இதுவரை
8 லட்சம்
கண்ணிவெடிகள்
அகற்றப்பட்டது



10
நரியுடன்
சேர்ந்தால்
ஏமாற்றமே
மிஞ்சும்!

# வவுனியாவில் சர்வதேச விமான நிலையம் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்கிறோம்



## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கூறினார் ஜனாதிபதி

வவுனியா, நவ. 20

"வவுனியா விமான நிலையத்தைச் சர்வ தேச விமான நிலையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாம் தற்போது ஆராய்ந்து வருகின்றோம். இவை அனைத் தும் நடைபெற உங்கள் ஆதரவை எதிர்பார்க் கிறேன்."

-இவ்வாறு நேற்று தெரிவித்தார் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க.

ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் பொரு ளாதாரத்தை வலுப்படுத்த இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதன் மூலம் 2023 முதல் 2027 வரை

19

# 'காகம் விரைவில் இலங்கை வரும்'

## சபையில் கூறிய நிரோஷன் பெரேரா

கொழும்பு, நவ. 20

வரவு-செலவுத்திட்டத்தை வெற்றி யடைய செய்ய "காகம்" விரைவில் மீண்டும் இலங்கை வரவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் நிரோஷன்

19

# வடக்கு காணி, வீட்டு பிரச்னைக்கு விரைவில் தீர்வை வழங்கும் அரசு!

## மாகாண மட்டத்தில் 8 குழுக்கள் அமைக்கப்படும் வவுனியா வந்த ஜனாதிபதி ரணில் உறுதியளிப்பு

வவுனியா, நவம்பர் 20

காணிப் பிரச்னைகளைத் தீர்ப் பதற்கு மாகாண மட்டத்தில் 08 குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

19



# சகலரும் ஏற்கும் தீர்வை வடக்குக்கு வழங்குவேன்!

## ஜனாதிபதி திட்டவட்டம்

வவுனியா, நவ. 20

வடக்கின் பிரச்னைக் குத் தீர்வு காணும்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களையும் ஒன் றிணைத்து அதற்கான தீர்வுகளைப் பெற் றுக்கொடுக்க தயார் என்றும்

19



# வவுனியாவில் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் கூட்டமைப்பு எம்.பிக்கள்!

வவுனியா, நவ. 20

வவுனியாவில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற

19



# ஜனாதிபதியின் வருகைக்கு வவுனியாவில் கடும் எதிர்ப்பு

வவுனியா, நவ. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியாவுக்கு மேற் கொண்ட விஜயத்துக்கு எதிர்ப்பு வெளி யிட்டு காணாமல் ஆக்கப்பட்டோ

19

# சு.கவை கைப்பற்ற சந்திரிகா முயற்சி?

கொழும்பு, நவ. 20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் கைப் பற்றும் நடவடிக்கை ஒன்றை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க ஆரம்பித்துள்ளார் என தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசாங்கத்திற்குச் சென்று அமைச் சுப் பதவிகளை

19

# தேர்தலை ஒத்திவைக்க நாடகம் ஆடுகிறது அரசு

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 20

தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கம் பல வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவ தாக பாராளு மன்ற உறுப்பினர் பேராசிரியர்

19

# பயங்கரவாத சட்ட கைதிகள் குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை!

## அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரை யாடலில் இந்த தீர்

19

# இப்படியும் நடக்கிறது...!

புலம்பெயர்ந்த தமிழர்கள் இப்போது கொழும்புக்கு வந்தால் தவறாது செய்கின்ற ஒரு வேலை அரசாங்கத்திலுள்ள முக்கிய அமைச்சர்கள் யாரையேனுமோ அல்லது முடிந்தால் ஜனாதிபதியையோ சந்தித்து படம் எடுத்துக்கொள்வதுதான்.

பின்னர் அந்தப் படத்துடன், ஒரு செய்திக் குறிப்பை தமது முகநூலில் பதிவுசெய்து விட்டு, சுய இன்பம் காண்கிறார்கள்.

அண்மையில், லண்டன் சென்றிருந்தபோது பிரிட்டனின் முக்கிய தமிழ் வர்த்தகப்புள்ளி ஒருவரை ஜனாதிபதி சந்தித்து பல விடயங்களை பேசியது பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அவர் சாதாரணமான ஒரு வர்த்தகர் அல்லர். இங்கு நெருக்கடியிலிருக்கும் சில அரச வர்த்தக நிறுவனங்களையே வாங்கும் அளவிற்கு வசதிபடைத்தவர் என்பதால் அவரை சந்தித்தது நாட்டுக்கும் நல்லதுதான்.

அந்தச் சந்திப்பில் அவர் தமிழ் மக்கள் சார்பிலும் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்ததும் அதனைத் தொடர்ந்து சில கைதிகள் விடுதலை செய்யப்பட்டபோது அதற்கு அவரின் கோரிக்கையும் காரணம் என்றும் கூறப்பட்டது.

அவ்வாறு வெறுமனே கைதிகள் விடுதலைக்கு உரிமை கோரியதோடு நின்றுவிடாமல், விடுவிக்கப்பட்ட கைதிகள் ஒவ்வொருவருக்கும் மிகப்பெரிய தொகையை உதவியாகவும் வழங்கியிருந்ததாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்த செய்திகளைப் பார்த்த அல்லது படித்த புலம்பெயர் தமிழர்கள் இப்போது கொழும்பு வந்தால், எப்படியாவது ஜனாதிபதியையோ அல்லது நீதி அமைச்சரையோ சந்தித்து கோரிக்கை மனு ஒன்று கொடுப்பதை வழக்கமாக்கியிருக்கின்றனர்.

அவ்வாறு கொடுக்கும் கோரிக்கை மனுவில், கைதிகள் விடுதலை, இனப்பிரச்னைக்கு தீர்வு என்று குறிப்பிடவும் தவறுவதில்லை.

அடுத்த பொங்கலுக்கு சில கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி அண்மையில்கூட மனோ கணேசனுடனான சந்திப்பு ஒன்றில் அவருக்கு உறுதியளித்திருந்தார்.

அப்படி பொங்கலுக்கு சிலர் விடுதலை செய்யப்படுகின்ற போது, இனி ஜனாதிபதியிடம் மனு கொடுத்தவர்கள் எல்லோரும் அதற்கு உரிமைகோரப் போகின்றார்கள். இதைத்தான் சுயஇன்பம் காண்கிறார்கள் என்றேன்.

இலங்கை பொருளாதார நெருக்கடியைச் சந்தித்ததுமே, பலரும் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு தொடர்பாகக் கவனம்செலுத்தத் தொடங்கியிருந்தனர். அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. அமெரிக்காவிலிருந்து ஒரு தமிழர் அமைப்பு, தமிழர் பிரச்னையைத் தீர்த்து வையுங்கள் உங்கள் கடன்கள் முழுவதையும் ஈடுசெய்கின்றோம் என்று அறிக்கை வெளியிட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இதனை கவனத்தில் எடுத்த சில புலம்பெயர் "பிரகிருதிகள்" தாங்களே புலம்பெயர் தமிழர் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு இங்கு "சீன்" காட்டியது பற்றி முன்னரும் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது புலம்பெயர் தேசம் எங்கும் இருந்து சிலர் தொடர்ச்சியாக அரச தரப்பைச் சந்திக்க முயன்று கொண்டிருக்கின்றனர்.

அண்மையில், ஜனாதிபதியுடன் நெருக்கமான தலைவர் ஒருவர் தொடர்புகொண்டு ஒரு பெயரைக் கூறி இவரைத் தெரியுமா? என்று கேட்டார்.

அப்படியொரு பெயரை நான் முன்னர் கேள்விப்பட்டதில்லை. ஆனால், அவர் தாயகத்தில் செய்ததாக சில விடயங்களை பட்டியலிட்டபோதுதான் அவர் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் பெயரை இவர் உச்சரித்ததில் இருந்த தவறால் எனக்கு அவரை அடையாளம் தெரியவில்லை.

"ஏன் கேட்கின்றீர்கள்" என்றபோது,

"ஜனாதிபதி அமைக்க யோசித்துக் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்தோர் காரியாலயத்தின் தவிசாளர் பதவிக்கு விண்ணப்பித்திருக்கிறார், அதுதான் கேட்டேன்" என்றார்.

முதலில் புலம்பெயர் தமிழர்கள் பற்றி ஒரு சரியான தெளிவை அரச தரப்பினர் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மட்டும் அவருக்கு ஆலோசனை கூறினேன்.

புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தலைகாட்ட முடியாதவர்கள் எல்லோரும் இப்போது தமக்கு அடையாளம் தேட தாயகத்துக்குப் படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். அரசாங்கம் நல்லது செய்யவேண்டும் என்று விரும்பினாலும் நம்மவர்கள் விடமாட்டார்கள் போலத்தான் இருக்கின்றது என்றார், இதுபற்றி கருத்துச் சொன்ன நண்பர் ஒருவர்.!

- ஊர்க்குருவி

# 3 வீடுகள் உடைத்து ரூ.16 இலட்சம் பெறுமதியான நகைகளை திருடியவர் ஹெரோயினுடன் கைது!

யாழ்ப்பாணம், நவ. 20

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் மற்றும் இளவாலைப் பகுதியில் உள்ள வீடுகளை உடைத்து 16 இலட்சம் ரூபா தங்க நகைகளை திருடிய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் திருடிய நகைகள் சிலவற்றை நகைக் கடையில் அடகு வைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவரிடமிருந்து 130 மில்லிக்கிராம் ஹெரோயின், நகைகள், நகை அடகு வைத்த ஆவணம்



மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டன.

குறித்த சந்தேகநபர் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர். சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# இலங்கைக்கு மீண்டும் சீனா அரிசி நன்கொடை

கொழும்பு, நவ. 20

இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மற்றுமொரு தொகுதி அரிசிப் பொதிகள் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை 1,000 மெற்றிக் தொன் பொதிகள் கொண்ட அரிசித் தொகை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த அரிசி பொதிகள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரை 7,000 மெற்றிக் தொன் அரிசிப் பொதிகள் சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இயற்கைப் பாதுகாப்பின் ஊடாக கடன் நிவாரணம் நாடும் இலங்கை

கொழும்பு, நவ. 20

இலங்கையானது பல தசாப்தங்களில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் பிற நிறுவனங்களுடன் இயற்கைக்கான கடனுக்கான பரிமாற்றத் திட்டத்திற்காக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸின் கூற்றுப்படி, காலநிலை மாற்றத்தை மையப்படுத்தப்பட்ட நிதியில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான "இயற்கைக்கான கடன்" பரிமாற்ற ஒப்பந்தத்திற்கு இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இது எகிப்தில் நடந்த ஐக்கிய நாடுகளின் கோப் 27 உச்சிமாநாட்டில் விவாதிக்கப் பட்டது.

பொருளாதார நெருக்கடி பிரச்னைகளை எளிதாக்க, கடன் பெறுவதற்காக இயற்கை இடமாற்று ஒப்பந்தங்களுக்கு உடன்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஈக்வடோர், இலங்கை உள்ளிட்ட நாடுகள் ஆராயப்படுகிறது.

இருதரப்பு ஒப்பந்தத்தில் வெளிநாட்டுக் கடனை வாங்குதல், உள்ளூர் நாணயமாக மாற்றுதல் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பணத்தை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

பரிவர்த்தனைக்கான திறவுகோல், வணிக வங்கிகள் அல்லது அரசாங்கங்கள் கடனை அசல் கடனின் முழு மதிப்பை விட குறைவாக விற்கும் விருப்பத்தில் உள்ளது.

இதற்கிடையில், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க ரொய்ட்டர்ஸிடம் பேசுகையில், இலங்கை ஒரு ஒப்பந்தம் செய்வதற்கான ஆரம்ப கட்டத்தில் இருப்ப தாக தெரிவித்துள்ளார்.

கடனை ரத்து செய்வதற்கு ஈடாக, சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுப்பதை இந்த திட்டத்தில் உள்ளடக்கியதாக அனில் ஜாசிங்க கூறியுள்ளார்.

ஒதுக்கப்பட்ட அமைப்புகளுக்கான மதிப்பை முடிவு செய்தவுடன், இலங்கையின் கடன் வழங்குநர்களிடம் ஆலோசனை கேட்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், 1 பில்லியன் டொலர் கடன் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது, இருப்பினும் அது மிக விரைவில் உறுதிப்படுத்தவேண்டும் என்றார்.

எகிப்தின் ஷர்ம் எல் - ஷேக்கில் நடக்கும் கோப் 27 காலநிலைப் பேச்சுவார்த்தையில் வளரும் நாடுகளிடையே அதிகக் கடன்சுமை பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக ஆராயப்பட்டது.

ஒரு தீவிர காலநிலை நிகழ்வுக்குப் பிறகு கடன் செலுத்துதல் இடைநிறுத்தம், இயற்கைப் பாதுகாப்பிற்கான கடன் பரிமாற்றம் மற்றும் ஆற்றல் மாற்றத்திற்கான சலுகை நிதி ஆகியவை வழங்கப்படும் தீர்வுகளில் அடங்கும்.

பேச்சுவார்த்தைகள் முடிவடையும் போது, ஐரோப்பிய ஒன்றியம் ஒரு காலநிலை-நிதி ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது, அதில் கடன் நிவாரணம் உட்பட நிதி விருப்பங்களின் "மொசைக்" அடங்கும்.

இதற்கிடையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதியத் திட்டத்தைப் பாதுகாப்பதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கும் செயற்பட்டு வருகின்றார், இது இலங்கைக்கான ஏனைய கடன்களை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுக்க உதவும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்புக்கு உதவும் மறுசீரமைப்புப் பேச்சுக்களை முடிக்க உள்ளூர் அதிகாரிகள் தற்போது இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். (அ)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிட சிறந்தது எதுவும் இல்லை"

- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

# பட்ஜெட்டுக்கு எதிராக கூட்டணி வாக்களிக்கும்

## இராதாகிருஷ்ணன் அறிவிப்பு

கொழும்பு, நவ. 20

மலையக மக்களின் பிரச்னைகளை அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் உள்வாங்கப்படவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்கள் மிகவும் பின்தள்ளப்பட்ட மக்கள் இவர்கள் தொடர்பிலும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என ஐ.நா பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளோம்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த தினங்களில் ஐ.நா பிரதிநிதிகளை நானும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், எம்.பி உதயகுமாரும் சந்தித்து கலந்துரையாடிய பொழுது இந்த மலையக மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டோம்.

வடக்கு, கிழக்குக்கு அப்பால் வாழ்கின்ற மலையக மக்களுக்கு அடிப்படை பிரச்சினைகள் அதிகமாகவே காணப்படுகின்றது. எனவே இவர்களையும் கருத்திற் கொண்டு இவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர்களிடம் வலியுறுத்தினோம்.

இதற்கு பதிலளித்த அவர்கள் எதிர்வரும் ஆண்டு ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் மலையக மக்களின் பிரச்னைகள் தொடர்பில் உள்வாங்கப்படவுள்ளதாக உறுதியளித்தனர்.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக குறிப்பிடுவதற்கு எதுவும் கிடையாது. மக்கள் நலன் சார்ந்த எந்த விடயங்களும் இந்த வரவு செலவு திட்டத்தில் இல்லை. மாறாக மக்களுக்கு சுமை ஏற்றுகின்ற வரவு-செலவுத் திட்டமே இது. அதற்கு ஆதரவு வழங்கமுடியாது.

இந்த வரவு - செலவுத் திட்டம் மக்களின் மீது மேலும் சுமைகளை ஏற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், ஏற்கனவே பொருளாதார ரீதியில் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது.

மக்கள் எதிர்பார்த்த எந்த விடயங்களையும் ஜனாதிபதி உள்வாங்கவில்லை. அத்தோடு, மலையகத்தை பற்றி ஒரு வார்த்தை கூட இந்த வரவு செலவு திட்டத்தில் அவர் கூறவில்லை.

பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதன் பிறகு, உணவு தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு போன்ற விடயங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டது மலையக மக்களே. எனவே, இதனை கருத்திற் கொண்டு மலையக மக்களுக்கு தேவையானவற்றை அறிந்து புதிய திட்டங்களை எதுவும் அவர் முன்வைத்திருக்கலாம்- என்றார். (அ)

# முதலாம் தர மாணவர்களுக்கு ஆங்கிலம் 2023 மார்ச் முதல்!

கொழும்பு, நவ. 20

முதல் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கில மொழியின் நடைமுறை பயன்பாடு மார்ச் 2023 முதல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் ஆரம்பமானது.

இதற்காக நாடளாவிய ரீதியில் சுமார் 450 பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு முறையான பயிற்சிகளை வழங்கிய பின்னர், அவர்கள் முதலாம் வகுப்பிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளனர்.

இந்த மாகாண ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் பின்னர், 2023 ஆம் ஆண்டின் முதல் பாடசாலை தவணை முதல் நடைமுறைச் செயற்பாடுகளின் அடிப்படையில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். (அ)

## காடழிப்பு அதிகரிப்பு;

# கிராமங்களை நோக்கி மயில்கள் படையெடுப்பு

கொழும்பு, நவ. 20

பலாங்கொடையில் பல கிராமப்புற பகுதிகளை மயில்கள் ஆக்கிரமித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பலாங்கொடை நகருக்கு அண்மித்த கஹட்டபிட்டி, ஹபுகஹகும்புற, பட்டுகம்மன உட்பட்ட பெரும் பரப்புக்களில் இவை சஞ்சரிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவை நெல், மரக்கறி, பழவகைகளை உண்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இவற்றின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அவற்றின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை வகைதொகையின்றி காடுகள் அழிக்கப்பட்டு வருவதனால் மயில்கள் காடுகளை விட்டு உயிர்ப்பாதுகாப்புக்கருதி கிராமங்களை நாடிவருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)



# யாழில் திரைத்துறை கலைஞர்களின் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

வடக்கில் சினிமா துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் கலைஞர்களுடனான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

இதில் சிறப்பு வளவாளராக நடிகர் ரஜினிகாந்தின் "கோச்டையான்" உள்ளிட்ட பல படங்களில் உதவி இயக்குனராக பணியாற்றிய எம்மவரான சூரியப்பிரதாப் பங்கேற்றார்.

அவர் தற்போது, மறைந்த பழம்பெரும் நடிகர் தியாகராஜ பாகவதர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றின் ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து பிரபல ஒடிடி தளம் ஒன்றுக்கு வெப் தொடர் ஒன்றை இயக்குகின்றார்.

மேலும், யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம், யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ரதிதரன் மற்றும் அவுஸ்ரேலியாவில் இருந்து வந்திருந்த சினிமா செயற்பாட்டாளர் அருள் பொன்னையா உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

குறித்த சந்திப்பில், 40 சினிமா கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, இயக்குனர் சூரியபிரதாப்பின் சினிமா சார்ந்த அனுபவப் பகிர்வு , ஈழ சினிமாவின் இன்றைய நிலையும் எதிர்காலமும், அத்துடன் சில தயாரிப்பு முயற்சிகள் பற்றிய தகவல் பரிமாற்றம் என்பன இடம்பெற்றன.

இது ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடலாக நடந்து முடிந்ததுடன், எம் சினிமா கலைஞர்களுக்கான அடுத்த கட்ட வளர்ச்சிக்கு சிறு தூண்டுதலாகவும் அமைந்திருந்தது. இவ்வாறான சந்திப்புக்கள் இனிவரும் காலங்களிலும் அவசியம் என்பதை நிகழ்வில் கலந்து கொண்ட பலர் குறிப்பிட்டிருந்தனர். (அ)

# வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 20

எஹெட் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைகழக மருத்து பீடத்தினால் முன்னெடுக்கப்படும் "வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு - Water Security in Northern Province (WASPAR)" என்ற செயற்றிட்டத்தின் நடு வழி ஆய்வரங்கும், "வடக்கின் நீருக்கான உரையாடல் மன்றம் - NORTHERN WATER DIALOGUE FORUM" என்ற கருத்துரைப்பு அரங்கும் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைககழக மருத்து பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாது காப்பு செயற்றிட்டத்தின் நடுவழி அறிக்கையிடலாக இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் வடமாகாணத்தின் நல்லூர், கோப்பாய் மற்றும் அக்கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 13 ஆய்வு முன்வைப்புகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி திங்கட் கிழமை நீர் வள முகாமைத்துவத்துடன் செயற்படுகின்ற அரச நிறுவனங்கள் மற்றும் ஆய்வின் செயற்படு குழுக்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட ஆய்வுத் தரவின் அடிப்படையில் , பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்கள் - ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் நிலைமைகள் பற்றி ஆய்வரங்கில் முன்வைக்கப்படவுள்ளது டன், பங்கெடுப்பு ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் நீர் வளத்துடன் தொடர்புபட்ட அதிகாரம் மிக்க தரப்புகளுடனான கலந்துரையாடல் கள், திறவுரைகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் நவம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, நீர் வள முகாமைத்துவத்துடன் செயற் படுகின்ற அரச நிறுவனங்கள், ஆய்வு நடவடிக்கைக்கு தன்னார்வத்துடன் ஒத்துழைப்பு வழங்கும் குழுக்கள் - பொது மக்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இடையிலான "வடக்கின் நீருக்கான உரையாடல் மன்றம்" என்ற கருத்துரைப்பு அரங்கும் இடம்பெறவுள்ளது. (அ)

# மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் இருவர் விபத்தில் சிக்கி மரணம்

கொழும்பு, நவ. 20

பண்டாரகம - மொரன்துடுவ பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிள் பந்தயம் சென்ற போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த விபத்தில் 18 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(அ)

# நெருக்கடிக்கு தீர்வு காணும் பட்ஜெட்

## பாராட்டுகின்றார் ஹக்கீம்

கொழும்பு, நவ. 20

நாட்டில் காணப்படும் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் விமர்சனத்திற்கு உரியதல்ல என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முக்கியமான பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்றும் நாட்டின் சட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படாமை பிரச்னைக்கு வழிகோலுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

30 வருட யுத்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மத்திய தர வருமான நாடாக இருந்த இலங்கை குறைந்த வருமானம் கொண்ட நாடாக மாற்றப்பட்டுள்ளது என்றும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ள பலரும் முன்வைத்த யோசனைகளை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டார். (அ)

# பொருளாதார நெருக்கடிநிலைக்கு தீர்வு காண ஆளும் தரப்பு தடை!

## மைத்திரிபால சிறிசேன அழைப்பு



**கொழும்பு, நவ.20**

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க கோட்டபய ராஜபக்ஷவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புடன் செயற்பட்டாலும் ஆளும்கட்சி முட்டுக்கட்டை போடுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எவ்வாறாயினும் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாட்டுக்கு பிரதான ஆளும் கட்சி தடையாக இருப்பதாக மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொருளாதார கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனில் முக்கிய நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் பொருளாதார பாதிப்பிற்கு யார் காரணம் என ஆராயாமல் எதிர்காலம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

# வெளிநாட்டு சேவைக்கு ஆட்சேர்க்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 20

வெளிநாட்டு சேவையில் 40 வெற்றிடங்களுக்கு புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, 2018ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு சேவைக்கான அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே வெளிநாட்டு சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஜூலை மாதத்திற்குள் வெளிநாட்டு சேவைக்கு குழுக்களாக 40 பேரை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு தூதரகங்களுக்கு இலங்கையர்கள் நீண்ட நேரம் வரிசையில் நின்று தமது சேவைகளை நிறைவேற்றுவது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பிரகாரம் இது தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# உடையார்கட்டுப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 20

உடையார்கட்டு பிரதேச நினைவேந்தல் கட்டமைப்பின் ஒழுங்கமைப்பில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் உடையார்கட்டு பிரதான வீதியருகில் ஒழுங்கமைக்கப்பட்ட மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை 10:30மணிக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வில் பொதுச்சுடரினை கரும்புலி புலிகளின் தாயாரான மரியாய் அவர்களும், நான்கு மாவீரர்களின் தாயாரும் எல்லைப்படை வீராங்கனையுமான ஜோசப் முனியம்மாவும் இணைந்து ஏற்றிவைத்தனர்

தொடர்ந்து ஈகைச்சுடரினை உடையார்கட்டு மண்ணின் முதல் மாவீரன் வீரவேங்கை கபிலின் தந்தையார் சுப்பிரமணியம் ஜயா அவர்களும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணி மக்கள் எழுச்சி இயக்கத்தின் பிரதம இணைப்பாளர் வேலன் சுவாமிகள், வடகிழக்கு முன்னேற்றக் கழகத்தின் தலைவர் லவக்குமார், மற்றும் சமூக செயற்பாட்டாளர் கவிதா ஆகியோரும் இணைந்து ஆரம்பித்து வைத்ததுடன் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், உடையார்கட்டு பிரதேச வர்த்தக சங்க பிரதிநிதிகள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பொதுமக்கள் என ஈகைச்சுடரேற்றி அஞ்சலித்தனர்.

மலர் வணக்கத்தினை மாவீரர் வீரவேங்கை கனிக்கொடியின் தாயாரும் உடையார்கட்டு கிழக்கு மாதர் சங்கத்தின் தலைவியுமான பத்மலோஜினி ஆரம்பித்து வைத்தார்.

மாவீரர்களின் பெற்றோர்களுக்கு பயன்தரு தென்னைமரக் கன்றுகளும் மதிய உணவும், உடுதுணிகளும் வழங்கப்பட்டு நன்றியுரையுடன் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (அ)

# கிழக்கு இலக்கிய விழாவில் பல கலைஞர்கள் கௌரவிப்பு

திருமலை, நவ. 20

கிழக்கு மாகாணக் கலாச்சார திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாணக் கலைஞர்களை கௌரவிக்கும் விழா நேற்று முன் தினம் திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும், ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜெலீல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குலதீபன், பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் கே.கோபாலரத்தினம் உள்ளிட்ட மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள கலைஞர்கள் இதன்போது பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து, சான்றிதழ் மற்றும் விருதுகள் போன்றவற்றை விழாவின் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான சிறந்த பாடகர்கள், எழுத்தாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மாணவனை தாக்கிய ஆசிரியர் கைதானார்

கொழும்பு, நவ. 20

பாதுக்கையில் உள்ள பாடசாலை ஒன்றில், கடந்த 8ஆம் திகதி தரம் 10 இல் கல்வி கற்று வரும் மாணவர் மீது பௌதீக பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தாக்கியுள்ளதாக குறித்த மாணவன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பெற்றோர் மாணவரை ஹோமாகம பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கும் மற்றும் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கும் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது, குறித்த ஆசிரியரின் தாக்குதலில் மாணவனின் இடது காது பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாணவனை தாக்கிய ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஹோமாகம நீதவான் நீதிமன்றில் அவர் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பாதுக்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த சில நாட்களாக ஆசிரியர்களினால் மனிதாபிமானமற்ற முறையில், தாக்குதலுக்கு உள்ளாகி மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. (அ)

ஈழநாடு
Eelanadu
20.11.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஐ.நாவின் தலையீட்டை கோருதல்?

ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் எல்லையென்ன, அதனால் என்னவெல்லாம் முடியுமென்பதை, கடந்த பதின்மூன்று வருடங்களாக தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர். 2009இல், யுத்தம் மோசமாக முடிக்கப்பட்டதன் பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், சிறிலங்காவை பாராட்டி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. பின்னர், 2012 இல், அமெரிக்க அனுசரனையுடன் அதே பேரவையில் சிறிலங்காவின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி தீர்மொனமொன்று நிறைவேற்றப்பட்டது. 2012 இலிருந்து தொடர்சியாக பல பிரேரணைகள் இலங்கையின் மீது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை. ஏன் நிறைவேறவில்லை என்னும் கேள்விக்கான பதிலாக கோபப்படலாம், விமர்சனங்களை முன்வைக்கலாம் அல்லது, அவ்வப்போது, வீதிகளில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களின் அதிருப்திகளை வெளிப்படுத்தலாம். இதற்கப்பால் என்ன செய்வது? எவரிடமும் பதிலில்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை மட்டுமல்ல, இன்று தமிழ் கட்சிகளிலுள்ளோர் அவ்வப்போது உச்சரித்துவரும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம் ஆகியவையும் சர்வலோக நிவாரணிகள் அல்ல. அவற்றின் சுயாதீனத் தன்மைக்கு எல்லைகளும் வரையறைகளும் உண்டு. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னைநாள் ஆணையாளர், நவி பிள்ளையே பேரவையின் பலவீனம் தொடர்பில் பேசியிருக்கின்றார். அதாவது, மனித உரிமைகள் பேரவையானது புவிசார் அரசியல் போட்டிகளாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கு தனது சொந்த நாடான தென்னாபிரிக்கா கூட விதிவிலக்கல்லவென்று, அவர் ஒரு முறை கூறியிருந்தார்.

இந்த யதார்த்தங்களை கருத்தில்கொள்ளாமல் ஐக்கிய நாடுகள் சபையிடம் அதிகம் எதிர்பார்ப்பது, இறுதியில் ஏமாற்றத்தையே தரும். சர்வதேச அமைப்புக்களின் மூலம் நீதியை பெறுவது மிகவும் சிக்கலான பொறிமுறையாகும். நிச்சயம் வாய்ப்பு கிடைக்குமென்பதற்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை. முயற்சிகளை செய்யலாம் ஆனால் அந்த முயற்சிகள் மீது மட்டுமே நம்பிக்கைவைத்து, ஏனைய வழிமுறைகளை பரிசீலிக்காமல் விட்டால், இறுதியில் ஏமாற்றமே மிஞ்சலாம்.

ஐக்கிய நாடுகளின் தலையீட்டை புதிதாக கோரவேண்டியதில்லை. இறுதி யுத்தத்தின்போதும், யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்தும், ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள் பல்வேறு வழிகளில் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. 2012 இலிருந்து, தமிழர் பிரச்னை சர்வதேர அரங்கில் பேசுபொருளாக இருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள்தான் பிரதான காரணமாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் பேசுபொருளாக இருப்பதன் காரணமாகவே இன்றும் பொறுப்புக் கூறல் விவகாரம் பேசுபொருளாக இருக்கின்றது. தமிழ் மக்களை பொறுத்தவரையில் இது ஒரு சாதகமான விடயம்தான். இதுவும் இல்லாமல் போவதையும் விட, இருப்பது நன்மையானதுதான். ஐக்கிய நாடுகளின் தலையீடுகள், அதே போன்று ஏனைய நாடுகளின் தலையீடுகள் அனைத்துமே, சிறிலங்காவின் ஆட்சியாளர்களின் அனுசரனையோடுதான் விளைவுகளாக மாற முடியும். இந்த அடிப்படையில்தான் இதுவரையான அனைத்து விடயங்களும் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறில்லாது அவர்கள் நேரடியாக தலையீடு செய்யவேண்டுமென்று நாம் கோராலாம் - ஆனால் அது இன்றைய உலக நடைமுறையில் எட்டாக் கனியாகும்.

தமிழர்கள் உச்சபட்சமான விடயங்களை கோர வேண்டுமென்று கூறுவோர் உண்டு. அதனை நாமும் மறுக்கவில்லை. உச்சபட்சமாக கோரினால்தான் ஆகக் குறைந்தளவான விடயங்களையாவது சாத்தியப்படுத்த முடியும். ஆனால் உச்சபட்சமான கோரிக்கைகளை முன்வைக்கும் தலைமைகளிடம், அவற்றை அடையமுடியாவிட்டாலும் கூட, அடையக் கூடியதை அடையவேண்டுமென்பதில் தெளிவு இருக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். கடந்த பதின்மூன்றுவருட காலத்தில், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் கொண்டிருந்தாக தெரியவில்லை.

# பொலிஸ் திணைக்களத்தில் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை தேவை

## பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

*கொழும்பு, நவ. 20*

*அண்மையகாலங்களில் பொலிஸாரின் சில முறையற்ற நடத்தைகள் மக்களின் நம்பிக்கையை சீர்குலைத்திருப்பதுடன் சர்வதேசத்தின் மத்தியில் நாட்டுக்கு இருக்கின்ற நன்மதிப்பையும் இல்லாமல் செய்திருக்கின்றது என்று பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக் காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் திணைக்களத்தில் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளது.*

*அண்மையில் ஆர்ப்பாட்டமொன்றுக்கு மத்தியில் களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெண் பொலிஸார் இருவரை கழுத்தில் பிடித்துத் தள்ளும் காணொளி சமூகவலைத்தளங்களில் வெகுவாகப் பகிரப்பட்டதுடன், அப்பொலிஸ் அதிகாரியின் நடத்தை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.*

*இச்சம்பவம் குறித்தும் அமைதிப் போராட்டத்தை சட்டவிரோதமான முறையில் நிறுத்துவதற்கும், அதில் கலந்துகொண்டோரைக் கைதுசெய்வதற்கும் பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.*

*அதன்படி அவ்விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்கு அவசியமான சில விவரங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்க பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.*

*அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-*

*களுத்துறையிலிருந்து ஆரம்பமான அமைதிப்போராட்டம் பாணந்துறையில் வைத்து பாணந்துறை பொலிஸாரால் இடைநிறுத்தப்பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இப்போராட்டத்தை இடைநிறுத்தியமைக்கான காரணம், யாருடைய உத்தரவின்பேரில் இடைநிறுத்தப்பட்டது, அந்த உத்தரவை செயற்படுத்தியது யார் என்ற விபரங்களை நீங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கவேண்டும்.*

*அதேபோன்று பாணந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்போது உரியவாறான உத்தரவுகளைப் பிறப்பித்து போராட்டத்தில் கலந்துகொண்டவர்களைப் பாதுகாப்பதற்கு அவர் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது.*

*எனவே பாணந்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்கத் தவறியமைக்கான காரணத்தையும் நீங்கள் எமக்குத் தெரியப்படுத்தவேண்டும்.*

*மேலும் பொலிஸ் அதிகாரிகளின் தரப்பிலிருந்து இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் உங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென்பது பற்றியும் தெளிவுபடுத்துங்கள். இவற்றை உறுதிப்பத்திரத்தின் வாயிலாக எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் எம்மிடம் கையளியுங்கள்.*

*அண்மையகாலங்களில் பொலிஸாரின் சில முறையற்ற நடவடிக்கைகள் ஏற்கனவே மக்களின் நம்பிக்கையை சீர்குலைத்திருப்பதுடன் சர்வதேசத்தின் மத்தியில் நாட்டிற்கு இருக்கின்ற நன்மதிப்பையும் இல்லாமல் செய்திருக்கின்றது.*

*எனவே பொலிஸ் திணைக்களத்தில் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உங்களிடம் வலியுறுத்துகின்றோம் என்று கோரப்பட்டுள்ளது.*

*(அ)*

# டுபாய், ஓமானுக்கு இலங்கையர்களை கடத்த முயற்சித்த ஒருவர் சிக்கினார்!

*கொழும்பு, நவ. 20*

*டுபாய் மற்றும் ஓமான் நாடுகளுக்கு இலங்கையர் களைக் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே சந்தேக நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (அ)*

# இரவு பொருளாதாரம் இந்நாட்டுக்கு தேவை


*கொழும்பு, நவ. 20*

*இந்த நாட்டுக்கு பொழுதுபோக்கு தேவை என சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.*

*நாட்டுக்கு இரவுப் பொருளாதாரம் தேவை எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகள் இந்த நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்புவதாக உறுதியளித்துள்ளதாகவும் கூறினார்.*

*எதிர்காலத்தில் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளால் நாடு அபிவிருத்தி அடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ஈயார் தேட்டத்தை...?

பகிர்வு -56

கணபதி சர்வானந்தா

அது ஒரு அறநெறிப் பாடசாலை. அந்த வகுப்பைக் கடந்து சென்றபோது... அந்த வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு ஆசிரியை பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அது அற வாழ்க்கையைப் போதிப்பதாக இருந்தது. ஔவையார் அருளிச் செய்த கொன்றை வேந்தனைச் சொல்லி அதன் பொருளை விளக்கிக் கொண்டிருந்தார்.அந்த வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரும் ஒரு மித்து அந்தப் பாடல் வரிகளை உரக்கச் சொல் லிக் கொண்டிருந்தபோது... நான் பழைய ஞாபகங்களை மீள எண்ணிக் கொண்டேன். எனது அருவரிக் கால நினைவுகள் என்னுள் ஒருமுறை  ஓடி மறைந்தன.

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் – கொன்றை வேந்தனிலுள்ள நான்காவது பாடல் வரிகள் அவை.

தேடிய பொருள் தேட்டு, தேட்டம் எனச் சொல்வர். தேடிய பொருளின் ஒரு பகுதியையவாது பிறரோடு  பகிர்ந்து உண்ணல் அவசியமானது.ஒருவர் தானாக முன்வந்து  அதனைப் பகிரும்போது நல்லவரை, அதனைப் பெறத் தகுதியானவரை, அது தேவையுடையோரை  இனங் கண்டு கொடுக்கக் கூடியவாறு நிலைமைகள் உண்டு. அது தவறி அதனைப் பிறருக்குக் கொடுக்காது, பிறரோடு பகிர்ந்து கொள்ளாது சேமித்து வைப்பாரோயானால், அவர் மரணத்தின் பின்னால் அவர் தேடிய அந்தத் தேட்டமானது தீமை செய்வோர் கையில் செல்ல வாய்ப்பிருக்கிறது. அல்லது அதனைத் தீயவர் கவர்ந்துகொண்டு சென்று உண்பர். அல்லது பிறருக்குத் தீமை செய்ய அதனைப் பயன்படுத்துவர்.

நாம் வழங்கினால் நல்லவர்களுக்கு வழங்கலாம். தீயார் பிடுங்கிக் கொண்டால் அவர்களைப் போன்ற தீயவர்களுக்கே அது பயன்படும். எனவே தேடிய செல்வத்தை நல்ல வர்களுக்கு வழங்க வேண்டும். கொடுத்துத வாதவன் சேமிப்பைத் தீயவனே அனுபவிப் பான் என்றதில் உண்மை உண்டு.

நான் அறிந்த ஒரு பொறியியலாளர், அவர் அரச பணிகளை ஏலத்தில் எடுத்துச் செய்வதைத் தொழிலாகக் கொண்டவர்.பெரும்பாலும் சாலைகள் அமைப்பதே அவர் பணி. ஏலம் எடுப்பதிலேயே அவர் நேர்மையைக் கடைப்பிடிப்பதில்லை என்பது பலரது ஆதங்கம். அதில் உட் புகுந்து பல தில்லு முல்லுகளைச் செய்து பண பலத்தால் ஏலத்தைத் தனக்குச் சாதகமாக்கி அதனைப் பெற்றுக் கொள்வார்.

இப்படியே அவர் செய்த பணிகளின் மூலம் ஈட்டிய பொருளைக் கொண்டு அவர் வாழ்ந்த கிராமத்தில் பல நிலங்களை வாங்கிக்  கொண்டார். அந்த ஊரில் அவருக்கு எல்லா இடங்களிலும் நிலங்கள் இருந்தன. அவற்றைக் குத்தகைக்கு விட்டு மேன்மேலும் பணத்தைச் சேமித்துக் கொண்டார். தனது செல்வத்தைக் கொண்டு ஊரில் ஒரு கடைத் தொகுதியைக் கட்டி அதனையும் வாடகைக்குக் கொடுத்தார். தன்னிடமிருந்த பொருளைக் கொண்டு தனக்குரியவற்றைத் தேடிக் கொண்டார். தனது வாரிசுகள் சுகமாகச் சீவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாதம் பல ஆயிரங்களை வருமானமாக அவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதான வழிவகைகளை அமைத்துக் கொடுத்தார். சுருங்கச் சொன்னால் அவர்கள் எதுவித முயற்சியும் செய்யாது "சும்மா"  இருந்து கால் நீட்டியவாறு சாப்பிடக் கூடியவாறு சூழ்நிலைமைகளை அமைத்துக் கொடுத்துக் கொண்டார்.

"தந்தை மகற்கு ஆற்றும் உதவி இது வல்லவோ" என்றனர் சிலர். வாழ்ந்தால் இப்படி அல்லவா வாழ வேண்டும் என்று புகழுரைத்தனர் பலர். அவரை முன்னுதாரணமாக வைத்துப் பேசிக்கொண்டவர்களும் உண்டு.இருந்தும் அவர் பிறருக்கு ஒரு வெள்ளிக் காசையும் கொடுத்துதவவில்லை என்றதே வரலாறு. அவருக்கு நெருக்கமான பல உறவுகள் பட்டினியால் வாடியபோது கூட அவர் அவர்களை "ஏன்" என்று கேட்கவில்லை.

அவரது புதல்வர்கள் படித்தனர். சிறப்பாகப் படித்தனர் என்று சொல்ல முடியாது. அதனால் வியாபராத்தைத் தமது தொழிலாகக் கொண்டனர். தந்தை சேர்த்த பொருளை எப்படிப் பேண வேண்டும் என்ற அறிவு அவர்களிடம் இல்லை, அது தொடர்பான அனுபத்தைப் பெற அவர்களுக்கு வாய்ப்பும் கிட்டவில்லை.   புதல்விக்கு வயது வந்த போது அவளுக்கு நல்ல இடம் பார்த்துத் திருமணம் செய்தார். அவளுக்குரிய பங்கைப் பகிர்ந்து அளித்தார். அவளும் சில நாட்களில் கட்டிய கணவரோடு வெளிநாடு போய் விட்டாள்.

சில நாட்களில் அந்தப் பொறியலாளரை நீரிழிவு நோய் பற்றிக் கொண்டது. காலப் போக்கில் அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். சேர்த்த பொருளில் ஒரு பகுதி மருத்துவச் செலவானது. சிகிச்சை பலனின்றி அவர் மரணித்துப் போனார். மனைவியோ அதிகம் கற்றதில்லை. வாழ்வு பற்றிய அத்தனை  அனுபவம் இல்லாதவர். அதனால் அவருக்குச் சுய சிந்தனை கிடையாது. அதனால் குடும்பத்தை அவரால் சரிவரப் பராமரிக்க முடியவில்லை. சொத்தையும் நன்கு பேண முடியவில்லை.

அவரது ஒரு மகனை அவரிடமுள்ள பொருள் பண்டத்துக்காகத் தேடிவந்து ஒருத்தி திருமணம் செய்து கொண்டாள். அவள் குறி எதுவோ அதனை அவள் நிறைவேற்றிக் கொண்டாள். இளையவன் வாழ்வில் பற்றற்ற வனாக மாறிக் கொண்டான். வெளிநாடு சென்ற மகள் அங்கு தனக்குரிய வசதி வாய்ப்பைத் தேடிக் கொள்ள ஊரிலுள்ள சொத்துகளை விற்றுக்  கொண்டு போய் விட்டாள். அதனால் அவள் தனது உடன் பிறப்புகளோடு அதிருப்தி கொண்டாள்.

பொறியியலாளர்  தனது தேட்டத்தில் வாங்கிக் குவித்த சொத்துக்கள் பல தற்போது அவரது குடும்பத்தினரிடமில்லை. வெளிநாட்டுக்குச் சென்று உழைத்துவிட்டு ஊர் திரும்பியவர்களில் பலர் அவரது சொத்துகளை வாங்கிக் கொண்டனர். அதிலும் அவர்கள் தமது பணத்தைப் பெருக்குவதற்கான வியாபாரங்களை ஆரம்பித்துள்ளனர். அவர் கட்டிய கட்டத்தில் தற்போது சமூகத்தைச் சீரழிக்கக் கூடிய வட்டிக் கடை, மது பானக்கடை, நிதி நிறுவனங்கள், இராசாயன உரக் கடை எனப் பல இயங்குகின்றன. மொத்தத்தில் அற வழியே சிந்தித்தால் அவர் குடும்பம் சிறப்பாக இல்லை. (பணம் மட்டும்  இருந்தால் சிறப்பு, அதனை எப்படியும் தேடிக்கொள்ள வேண்டும் என்று எண்ணு பவர்கள் கூற்றுப்படி அவர்கள் சிறப்பாக இருப்பதாகச் சொல்லலாம்.)

இவற்றையெல்லாம் எண்ணிக் கொண்ட போது அந்த அறநெறிப் பாடசாலையில் பிள்ளைகள் ஒன்றாகச் சேர்ந்து பாடிய "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்ற ஔவையின் கொன்றை வேந்தன் வரிகளே காதில் கேட்கிறது.

# இந்தவார ராசிபலன் 20.11.2022 - 26.11.2022

நல்ல நேரம்: 7.30 - 9.00 | ராகு காலம் : 04.30 - 06.00 | திதி : பஞ்சமி

நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 04

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் தடைகள் அகலும். செயல்களில் கவனம் தேவை. செலவு அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட நன்மை உண்டாகும். எதிர்பாராத சங்கடம் தோன்றும்.தொழிலில் ஏற்பட்ட பிரச்னைகளை சரிசெய்வீர்கள். குடும்பத்தின் நலனுக்காக செலவு ஏற்படும். உறவினர் வழியே சில சங்கடங்கள் உண்டாகும். எச்சரிக்கை அவசியம்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

முயற்சிகள் விறுவிறுப்பாக நடந்தேறும். யோசித்து செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஆற்றல் அதிகரிக்கும். எதிரிகள் விலகிச் செல்வர். செல்வாக்கு உயரும். எதிர்பாராத வருவாய் உண்டாகும். குடும்ப பிரச்னைகள் முடிவிற்கு வரும். சிலர் சொத்து வாங்குவீர்கள். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் உங்களைத் தேடி வந்து சரணடைவர். சிலருக்கு வெளிநாட்டிற்கு செல்லும் வாய்ப்பு  ஏற்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எண்ணம் நிறைவேறும். செயலில் சிரமம் உண்டாகும். எதிர்பாராத வரவால் உற்சாகம் அதிகரிக்கும். முயற்சிகள் எளிதாக நிறைவேறும். பிள்ளைகளுக்காக செலவு அதிகரிப்பதுடன் சில பிரச்னைகளையும் சந்திக்க வேண்டியதாக இருக்கும். தொழிலில் ஏற்றம் இறக்கம் இருந்தாலும் அதை சரி செய்வீர்கள். உடல் நலனில் கவனம் தேவை. ஆற்றல் அதிகரிக்கும்.உணர்ச்சி வசப்படாமல் செயலாற்றுவது நல்லது.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

முயற்சிகள் வெற்றியாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்ப நலனில் அக்கறை கூடும். பொருளாதார நிலை உயரும். சிலர் வீடு, வாகனம் என்று வாங்குவீர்கள். தொழில், பணியில் விருப்பம் நிறைவேறும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து வேலைக்குரிய தகவல் வரும். நன்மை அதிகரிக்கும் வாரம்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.  செல்வாக்கு உயரும். புதிய நண்பர்களால் ஆதாயம், அனுகூலம் என்ற நிலையை அடைவீர்கள். சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். வரவு அதிகரிக்கும். வாரத்தின் முதல்நாள் மகிழ்ச்சியாக செல்லும். செயல்களில் கவனம் செல்லும். தைரியமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்களின் சுய ஆற்றல் வெளிப்படும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செலவு அதிகரிக்கும். விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். குடும்பத்தில் சுபச்செலவுகள் உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். பொன், பொருள் சேரும். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் நன்மைகள் ஏற்படும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். அலைச்சலும் செலவும் அதிகரிக்கும். செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். உங்கள் முயற்சிக்கேற்ப வருவாய் உண்டாகும். வரவும், செலவும் நிறைந்த வாரம். உங்கள் நிலையில் முன்னேற்றமாக இருக்கும் என்றாலும் திடீர் செலவுகள் ஏற்படும். மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். சங்கடங்களை எல்லாம் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சிகளில் எளிதாக வெற்றி காண்பீர்கள். தொழில், பணியில் எண்ணம் நிறைவேறும். சிலருக்கு பணியில் விரும்பிய மாற்றம் உண்டாகும். செல்வாக்கு உயரும். முயற்சிகள் வெற்றி பெறும். எதிரிகள் பின்வாங்குவார்கள்.சொத்துகளில் உண்டான பிரச்னைகள் விலகும். மறைமுக எதிர்ப்பு விலகும். பொன், பொருள் வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

லாபம் அதிகரிக்கும். மனதில் தெளிவு பிறக்கும். செயல்களில் வெற்றி அடைவீர்கள். பொருளாதார நிலை உயரும். எதிர்பாராத செலவு ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றும் நிலை உருவாகும். லாபம் அதிகரிக்கும். நிதானமும் கவனமும் தேவை. முயற்சிகள் வெற்றி பெறும். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் ஏற்படும். வர வேண்டிய வரவு வந்து சேரும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எச்சரிக்கையும் கவனமும் தேவை.  திட்டமிட்டு செயல்படுவது நல்லது. பொருளாதார நிலை உயரும். வீண் சங்கடங்களால் மனதில் பயம் தோன்றும். சிரமம் நீங்கும். பிரச்னைகளைக் கண்டறிந்து சரி செய்வீர்கள். பணியில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். முயற்சிகள் இழுபறியாகும். பேச்சில் தெளிவும் வேகமும் உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செயல்களில் வெற்றிகளைக் காண்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் இழுபறி உண்டாகும். கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பாராத சங்கடங்கள் தோன்றும். அதன்பின் முயற்சிகள் வெற்றி பெறும்.


## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகள் எளிதாக நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் காண்பீர்கள். வார்த்தைகளில் கவனம் தேவை. எச்சரிக்கை அவசியம். செயல்கள் எளிதாக வெற்றி பெறும். அரசு வகையில் இருந்த நெருக்கடி மறையும். பணியாளர்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படுவர். செயல்களில் எச்சரிக்கை அவசியம். எதிர்பார்ப்பு நிறைவேறும். பேச்சில் கவனம் தேவை. செயல்களில் சங்கடம் உண்டாகலாம். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள்.

# ராஜீவ் கொலைக் கைதிகள் விடுதலை விவகாரம்:

# விடுதலைப் புலிகளுக்கு உதவிய இந்திய - வெளிநாட்டு சக்திகள்?

## வெளிக்கொணர்வதில் அரசு அக்கறை கொள்கிறதா?



சென்னை மடல்
-பகவான் சிங்-

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த ஆறு பேரை விடுதலை செய்து நவம்பர் 11 அன்று உச்ச நீதி மன்றம் வெளியிட்ட தீர்ப்பை எதிர்த்து, மறு சீராய்வு மனுவை இந்திய அரசு வியாழனன்று தாக்கல் செய்துள்ளது. இதையடுத்து, விடுதலை செய்யப்பட்ட இந்த ஆறு குற்றவாளிகளின் கொண்டாட்டங்களும் ஓய்ந்து போயின. டில்லியிலிருந்து வந்த, மத்திய அரசின் மறு சீராய்வு மனு குறித்த செய்தி, மகிழ்ச்சியை வண்ண வண்ண பலூன்களாகப் பறக்கவிட்டுக் கொண்டாடிக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான அவர்களது ஆதரவாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உற்சாகத்தைத் தரையிறக்கிவிட்டது. விடுதலைத் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்படும் மறு சீராய்வு மனுவுக்காக மத்திய அரசைக் குறைகூறும் இந்த ஏமாற்றமடைந்த ஆத்மாக்கள், இந்த அறுவர் விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்கள், மூத்த ஊடகவியலாளர்கள் போன்றவர்களையும் விமர்சிக்கின்றன

முன்னதாகவேகூட, இவர்களின் விடுதலை குறித்த கொண்டாட்டங்கள் சற்று அடக்கியே வாசிக்கப்பட்டன. காரணம், நளினியும் ரவிச்சந்திரனும் இந்தியக் குடிமக்கள் என்பதால், முழு விடுதலை பெற்றிருந்த நிலையில், மற்றைய நால்வரும் இலங்கைத் தமிழர்களாவதால், திருச்சியில் உள்ள முன்னாள் தீவிரவாதிகளுக்கான 'சிறப்பு முகாமுக்குள்' அடைக்கப்பட்டனர். நளினியின் கணவர் சிறிஹரன் என்கிற முருகன், சாந்தன், றொபர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோரே அந்த நால்வர். உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் உண்மையான அர்த்தத்துக்கு ஏற்றபடி, இந்த நால்வரையும் அரசு விடுவிக்கவேண்டும் என்று அவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கோரிவருகின்றனர்.

என் இனிய 'ஈழநாடு' வாசகர்களே, இந்த அறுவர் விடுதலை குறித்தும் அதைத் தொடர்ந்த இந்திய அரசின் மறு சீராய்வு மனு குறித்தும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அதனால், நுணுக்கமான தகவல்களுக்குள் செல்ல நான்



விரும்பவில்லை. மாறாக, இந்த விஷயத்தில் என் கருத்துகளை மட்டுமே நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். உங்களிடம் நான் முன்னமே பலமுறை சொன்னதுபோல், ஒரு பத்திரிகையாளனாக ஈழப் போருடன் என் நீண்ட நாள்

தொடர்பிலிருந்து நான் கற்றவை எனது இந்தக் கருத்துகள். இந்த ஆறு கைதிகளை விடுதலை செய்யும் போது, மே 18 அன்று மற்றொரு ராஜீவ் காந்தி கொலையாளியான பேரறிவாளனை விடுதலை செய்த அதே அடிப்படையில்தான் இந்த ஆறு பேரின் விடுதலையும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தற்போதைய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கைதிகள் முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்ட நிலையில், சிறையில் அவர்களின் நன்னடத்தை, அவர்கள் உயர்கல்வி பயின்றது,



இவற்றையும், அவர்களின் விரைவான விடுதலை கோரிய கருணை மனுக்களைப் பரிசீலனை செய்வதில் தமிழக ஆளுநர் உட்பட அதிகாரிகளின் மெத்தனப் போக்கையும் கவனத்தில் கொண்டே இத்தீர்ப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த ஆறு பேரும் போதுமான தண்டனையை அநுபவித்து விட்டனர் என்றும், இப்போது குடும்பம் மற்றும் சமுதாயத்தில் இவர்கள் சேர்ந்து வாழும் காலம் வந்துவிட்டது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இவர்களின் விடுதலை குறித்த தீர்ப்பை நியாயப்படுத்திய நீதிமன்றம், அவர்களால் சமுதாயத்துக்கோ நாட்டுக்கோ எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், வியாழனன்று மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மறு சீராய்வு மனுவில் இந்த ஆறுபேரும் விடுதலை செய்யப்பட்டு, அவர்கள் குடும்பத்துடன் இணைய அநுமதிக்கும் தீர்ப்பைக் கடுமையாக எதிர்த்துள்ளது.

தத்தம் குடும்பத்துடன் இணைந்து வாழக் காத்திருப்பவர்களில் நளினியும் அவரது கணவன் சிறிஹரன் என்கிற முருகனும் அடக்கம். என் முந்தைய 'ஈழநாடு' கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்தது போல், ராஜீவ் காந்தி கொலைக்கு ஓரிரு நாட்களுக்குள், இந்தத் தம்பதிகள் கைதானபோது, நளினி கர்ப்பமாக இருந்தார். சிறையிலேயே ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு நாட்களில் நளினி, செய்தியாளர் சந்திப்பில், முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டபோதும், பின்னர், காலக்கெடு தெரியாத ஆயுள் தண்டனையாக அது குறைக்கப்பட்டபோதும், தனிச் சிறையில் தான் இருந்ததனால், பிரசவத்திற்கும் வர மருத்துவர்கள் மறுத்ததையும், மற்றும் சில சிறைக் கொடுமைகளையும், தங்கள் மகள் ஹரித்ராவைச் சந்திக்கக்கூட முடியுமா என்று அவர்கள் அடைந்த வேதனை குறித்தும் வெளியிட்டார். மகள் ஹரித்ரா தற்போது, இங்கிலாந்தில் மருத்துவராகத் தன் கணவனுடன் வாழ்ந்து வருகிறார். இரண்டாண்டுகளுக்கு முன், வேலூருக்கு அருகில் நடந்த அவரது திருமணத்தை நடத்திவைக்க, அவரது பெற்றோர் பரோலில் வந்திருந்தனர். இப்போது, மகிழ்ச்சியுடன் குடும்பத்துடன் ஒன்றிணையவேண்டிய நேரம் என்று அந்தச் செய்தியாளர் சந்திப்பில் நளினி கூறினார். இதுவரை கருணையுடனும் இரக்கத்துடன் நோக்கினால், புரிந்து கொள்ளக்கூடியதே. அதன் பிறகு, முப்பதாண்டுகளுக்குப் பிறகு, சுதந்தரப் பிரஜையாக வலம் வரும் நளினி, ஊடகங்களைச் சந்திப்பதில் உற்சாகம் மீறி, கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டார். தான் ஒரு நிரபராதி என்றும் குற்றம் நடந்த இடத்தில்கூட தான் இல்லை என்றும் அவர் கூறினார். ஒரு மைல் தொலைவில் சாலையோரத்தில் இருந்த இந்திரா காந்தி சிலை அருகில் தான் இருந்ததாகவும் ஊடகங்களிடம் அவர் கூறினார்.

அதனால் என்ன? கொலைக் குழுத் தலைவன் சிவராசன், சம்பவத்துக்கு முந்தைய இரவில் தனது சகாக்களுக்கு அளித்திருந்த அறிவுரைப்படி, தற்கொலைக் குண்டு வெடிக்கச் செய்பவரையும், அதைப் படம்பிடிக்கத் தான் ஏற்பாடு செய்திருந்த புகைப்படக்காரர் ஹரிபாபுவையும் தவிர மற்ற குழுவினர், அந்த இடத்தை விட்டு விரைவில் அகன்று, முன்னரே முடிவு செய்யப்பட்ட ஓரிடத்துக்கு வந்து, அங்கிருந்து அவரவருக்கான பாதுகாப்பான மறைவிடங்களுக்குச் சென்றுவிடவும், அதற்குப் பிறகு, படகில் ஈழத்தை அடையவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. எனவே, சம்பவ இடத்தில் தான் இல்லை என்று நளினி சொன்னது ஒரு போலி வாதத்துக்குச் சரியாகத்

தோன்றினாலும், தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் ஒரு நிரபராதி என்றும்

கூறியதன் மூலம் அவர் பொய்யுரைத்துள்ளார். சம்பவம் நடந்த பிறகு நிகழ்ந்தவற்றை ஒன்றாகக் கோர்த்து ஒரு தீர்வை எட்டுவதில் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் காவல் துறை அதிகாரிகள் சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும், இந்தக் கொலை திட்டமிடப்பட்ட விதம், அதில் தொடர்புடையவர்கள் குறித்த தெளிவான முடிவை எட்டுவதில் அந்தக் குழு சற்று அலட்சியமாகவே செயல்பட்டது என்று நான் பல முறை எழுதிவந்திருக்கிறேன். சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப்பத்திரிகையில் பெரிய ஓட்டைகள் பல இருப்பதாகவே நான் உணர்ந்தேன். ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னால் இருக்கும் பெரிய சதி குறித்து விசாரணை செய்த



ஜெயின் கமிஷன் பரிந்துரைப்படி, 1998இல் அமைக்கப்பட்ட மல்ரி டிசிப்ளினரி மொனிற்றரிங் ஏஜென்சி (MDMA) என்ற அமைப்பு என்ன ஆனது என்று நான் கேள்வி எழுப்பினேன். அண்மையில், ஒக்ரோபர் 18 அன்று, ஒரு செய்தியைக் கண்டேன். இந்த 24 ஆண்டு பழைமையான எம்டிஎம்ஏ அமைப்பை மத்திய அரசு கலைத்து விட்டது என்றும், பல மத்திய பாதுகாப்பு அமைப்புகளிலிருந்தும் அதிகாரிகளை உள்ளடக்கி, சிபிஐக்குக் கீழ் பணியாற்றி வந்த இந்த அமைப்பு மே 2022இல் கலைக்கப்பட்டு, அதன் பணி, சிபிஐ-யின் ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டு விட்டது என்றும் அதிகார வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல் என்று பி ரி ஐ வெளியிட்டிருந்தது.

மூத்த உளவுத்துறை அதிகாரிகளை உள்ளடக்கிய எம்டிஎம்ஏ, பல நாடுகள் சம்பந்தப்பட்ட மாபெரும் சதி குறித்துப் பெருமளவில் எந்த வெளிச்சமும் பாய்ச்சவில்லை என்று அதிகாரிகள் ஒப்புக்கொண்டதாகவும் பிரிஐ செய்தி தெரிவிக்கிறது. வங்கிப் பரிவர்த்தனைகள் உட்பட, இந்த வழக்கின் பல்வேறு அம்சங்கள் குறித்துத் தகவல் கோரி, இலங்கை, இங்கிலாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு 24 கடிதங்களை எம் டி எம் ஏ அனுப்பியுள்ளது. அவற்றில் 20 கடிதங்களுக்குப் பதில் வந்துள்ளன. இன்னும் மிகச் சிலவே எஞ்சியுள்ளன. விசாரணை முற்றுப்பெறும் நிலையில் இருப்பதாகவும், இந்தக் கடிதங்கள் குறித்து சிபிஐ கையாளாது என்றும் இந்த பிரிஐ செய்தி கூறியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ரணிலின்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

## புதிய இன நல்லிணக்க முன்னெடுப்பின் நோக்கம்

“இன்று பெரும்பான்மையான இளைஞர்கள் இனவெறிக்கும் மதவெறிக்கும் எதிராக குரலெழுப்புகிறார்கள். இனங்கள் மத்தியில் நல்லுறவும் சமாதானமும் நிலவவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட சகல இனக்குழுக்களும் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்று சிங்கள இளைஞர்கள் கூறுகிறார்கள்.

“தமிழ்ச்சமூகம் நீண்டகாலமாக எதிர்நோக்கிவருகின்ற பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டியது அவசியம். போரின் காரணமாக தமிழ் மக்கள் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளினால் இடர்பாடுகளை அனுபவித்து வருகிறார்கள். தீர்க்கப்படவேண்டிய இனப் பிரச்சினைகளும் இருக்கின்றன. வடக்கின் அபிவிருத்திப் பணிகள் குறித்து புதிதாக சிந்திக்கவேண்டியிருக்கிறது.

“இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் அவர்களின் ஆதரவைப் பெறலாம் என்று நம்புகிறேன். தாய் நாட்டுக்கு வந்து அவர்கள் முதலீடுகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.”

கடந்த ஆகஸ்ட் 3 பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து தனது முதலாவது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்சினை தொடர்பில் கூறிய வார்த்தைகள் இவை.


அதற்கு பிறகு மூன்று மாதங்கள் கழித்து அவர் இப்போது இலங்கை அதன் 75 வது சுதந்திரதினத்தை அடுத்த வருடம் பெப்ரவரியில் கொண்டாடும்போது சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புவதாக கூறுகிறார். தனது இந்த முயற்சியில் இணைந்து செயற்பட முன்வருமாறு தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்த அவர் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இன நல்லிணக்கத்துக்கான திட்டத்தை வகுக்க பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அமைச்சுரவைக்குழு ஒன்றையும் நிய



மித்திருக்கிறார்.

நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் இந்த குழுவின் உறுப்பினர்கள். தங்கள் பணியை விரைவாக நிறைவுசெய்ய இவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு பிறகு கூடுவர் என்று அறிவிக்கப்பட்டது.

நாட்டை உலுக்கிய மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போருக்கு காரணமான தேசிய இனப்பிரச்சினை திகதி குறிப்பிட்டு தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. அடுத்த சுதந்திர தினத்தை நாடு கொண் டாடும்போது இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விருப்புவதாக ஜனா திபதி கூறியது சாத்தியமானளவு விரைவாக தீர்வைக் காணவேண்டும் என்ற அவரின் அக்கறையின் வெளிப்பாடாக இருக்கலாம்.



வட பகுதி பாராளுமன்ற உறுப்பி னர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக விக்கிரமசிங்க கூறியிருப்பது தமிழர் பிரச்சினையை வடக்குடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட ஒன்றாக குறுக்குவதில் அவர் நாட்டம் கொண்டிருக்கிறாரோ என்ற சந்தேகத் தைக் கிளப்புகிறது. இந்தப் பிரச்சினை வடக்கும் கிழக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதனால் கிழக்கு மக்களின் பிரதிநிதிகளையும் இணைத்ததாகவே அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும். ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ் அரசியல் கட்சிகளிடம் இருந்து கலப்பான பிரதிபலிப்பே வெளியாகியிருக்கிறது.

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் என்று ஜனாதிபதி குறிப்பிடும்போது அவர் பெரும்பாலும் போரின் விளைவான மனிதாபிமானப் பிரச்சினைகளையே மனதில் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. அந்த பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பது இடைக்கால ஏற்பாடுகளாகவே அமையமுடியும். நீண்டகால நோக்கில் இனப்பிரச்சினையின் மூல வேர்க்காரணிகளை இல்லாதொழிக்கக் கூடிய வகையில் நிலைபேறான அரசியல் தீர்வொன்றைக் காண முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தென்னிலங்கை மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய அரசியல் தகுநிலையில் ஜனாதிபதி இருக்கிறாரா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவைக்குழுவின் தலைவர் பிரதமர் குணவர்தனவும் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் இதுகாலவரையில் தமிழ்க்கட்சிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்திருக்கும் சிறுபான்மை இனங்களின் குறிப்பாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் மற்றும் மனக்குறைகளில் கணிசமானவற்றை ஒருபோதும் அங்கீகரிக்காத ஒரு அரசியல் கலாசாரத்தில் வந்தவர்கள். சிங்கள தேசியவாத கடும்போக்கு சக்திகளின் ஆதரவைக் கொண்ட இவர்கள் முன்னைய தங்கள் நிலைப்பாடுகளை தளர்த்தியிருக்கிறார்களா என்பது நாளடைவில் தெரியவரும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற ஆதரவில்தான் ஆட்சி நடத்துகிறார். சிறுபான்மை இனங்களுக்கு விரோதமான அரசியல் நிலைப்பாடுகளுக்கு பெயர்போன அந்த கட்சியை தனது இன நல்லிணக்க முன்னெடுப்புகளுக்கு ஆதரவு அளிக்கக் கூடிய ஒரு சக்தியாக ஜனாதிபதியினால் வழிக்கு கொண்டுவர முடியுமா என்ற இன்னொரு கேள்வியும் எழுகிறது.

இத்தகைய பின்புலத்தில் ஜனாதிபதியின் முன்னெடுப்புகளுக்கான “வெளிக் காரணிகள்” குறித்து அரசியல் அவதானிகள் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் கவனத்தை தூண்டுவனவாக இருக்கின்றன.

## தமிழர் பிரச்சினையை வடக்குடன் மட்டுப்படுத்தும் வகையில் அவரின் கருத்து

இலங்கை படிப்படியாக மேற்குலகின் செல்வாக்கின் கீழ் வந்துகொண்டிருக்கிறது. இதற்கான வழியை மேற்குலகை சாராத வல்லாதிக்க நாடுகளே ஏற்டுத்திக் கொடுக்கின்றன. இலங்கை கடன்பொறியில் இருந்து விடுபடுவதற்கு உதவுவதற்கு சீனா தயக்கம் காட்டுகிறது. அவசரகால உதவியாக தன்னாலியன்றதை ஏற்கெனவே செய்துவிட்ட இந்தியா இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சர்வதேச சமூகம் என்ன செய்யப்போகிறது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு மேற்குலகையும் அதன் நிறுவனங்களையும் நம்பியிருப்பதைத் தவிர இலங்கைக்கு வேறு வழியில்லை. ஆனால், மேற்குலகின் கோரிக்கைகள்: நிபந்தனைகள் உள்நாட்டில் பரந்தளவு அரசியல் விளைவுகளைக் கொண்டு வரக்கூடியவையாக இருக்கின்றன என்று கொழும்பில் இருந்து இயங்கும் மூத்த இந்திய பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான பி.கே. பாலச்சந்திரன் கூறுகிறார்.



பொருளாதாரக் கட்டமைப்பில் கடுமையான மாற்றங்களை, ஒழுங்காக்கல்களை செய்யவேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையை மாத்திரமல்ல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்பார்ப்புகள் மற்றும் ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின் கீழான ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகைகளுடன் இணைந்த மனித உரிமைகள் நிபந்தனைகளையும் கொழும்பு நிறைவேற்றவேண்டியிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இறுதியாக நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 வது கூட்டத்தொடரின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட விரிவான செயற்திட்ட மொன்றை மீள ஆரம்பிக்கு மாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரியது. அத்துடன் நம்பகத் தன்மை கொண்ட உண்மை அறியும் பொறிமுறை மற்றும் விசேட நீதி மன்றம் ஆகியவை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உட்பட ஏற்கெனவே உள்ள கடப்பாடுகளை குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் நடைமுறைப் படுத்துமாறு அந்த தீர்மானம் வலியுறுத்தியது. பொறிமுறைகளின் வடிவத்தை தீர்மானிப்பதில் உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வகிபாகம் கொடுக்கப்படவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டது.

இலங்கையில் இழைக்கப்பட்டிருக்கக்கூடிய சர்வதேச சட்டத்தின் கீழான குற்றச்செயல்களை விசாரித்து வழக்கு தொடுப்பதற்கு நாடுகடந்த - சர்வதேச நியாயாதிக்கத்தை பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் உட்பட பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு நாடுகளிடம் அந்த தீர்மானம் வேண்டுகோள் விடுத்தது.

தீர்மானத்தின் நிபந்தனைகள் நாட்டின் அரசியலமைப்பை மீறுவதாக அமைகின்றன என்ற காரணத்தைக்கூறி அரசாங்கம் அதை நிராகரித்தது. ஆனால், சர்வதேச தராதரங்களுக்கு ஏற்றமுறையில் மனித உரிமைகள் மற்றும் இன நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டிய தேவையை ஒத்துக்கொண்ட அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கும் கதவை திறந்தே வைத்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை இலங்கையினால் முற்றுமுழுதாக நிராகரிக்க முடியாது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் இதுவரை அகற்றப்பட்ட கண்ணி வெடிகள் 8 லட்சத்தை கடந்தது!

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணி வெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் அவசர வேலைத்திட்டத்தின் கீழ், இதுவரை 8 லட்சத்து 70 ஆயிரத்து 412 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் 206 சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு குறித்த காணிகள் பொது மக்களின் பயன்பாட்டுக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கிட்டத்தட்ட 15 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளதாகவும் மீள்குடியேற்றப் பிரிவு கூறுகிறது.

கண்ணிவெடிகளை அகற்றும் அவசர வேலைத்திட்டத்தின் கீழ், இதுவரை 870,412 சாதாரண கண்ணிவெடிகளும், 2,169 ராணுவ டாங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

அத்துடன், வெடிக்காத 3 லட்சத்து 65 ஆயிரத்து 403 ராணுவ வெடி பொருட்களும், 11 லட்சத்து 84 ஆயிரத்து 823 தோட்டாக்கள் மற்றும் ஏனைய சிறிய ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன எனவும் மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

**2026 இல் கண்ணி வெடிகள் இல்லாத நாடு**

கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அதன் படி, ஜூன் 2027ஆம் ஆண்டுக்குள், இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற வேண்டும்.




கண்ணிவெடிகளை அகற்றும் அவசர வேலைத்திட்டத்தின் கீழ், இதுவரை 870,412 சாதாரண கண்ணிவெடிகளும், 2,169 ராணுவ டாங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன், வெடிக்காத 3 லட்சத்து 65 ஆயிரத்து 403 ராணுவ வெடி பொருட்களும், 11 லட்சத்து 84 ஆயிரத்து 823 தோட்டாக்கள் மற்றும் ஏனைய சிறிய ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், "கண்ணி வெடிகளை அகற்றும் அவசர வேலைத்திட்டத்தின் கீழ், 2026ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கையை கண்ணி வெடிகள் இல்லாத நாடாக மாற்ற முடியும்" எனநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கை பூராகவும் கண்ணிவெடி அகற்றும் திட்டம் 2002ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப் பட்டு வருவதாக மீள்குடியேற்றப் பிரிவு கூறுகிறது.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனங் களை ஒருங்கிணைத்து வழிநடத்திக் கண்காணிக்கும் நடவடிக் கையினை - 2010ஆம் ஆண்டு நிறுவப்பட்ட "தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம்" மேற்கொள்கிறது. இதற்கு இலங்கை ராணுவம் நேரடியாகப் பங்களிக்கிறது.

தற்போது இலங்கை ராணுவத்தின் "மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு"க்கு மேலதிகமாக, இரண்டு சர்வதேச அரச சார்பற்ற கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களும், இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக் கைகளுக்காக, இலங்கை ராணுவத்தின் மனிதாபிமான நிலக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு இலங்கை அரசு நிதியுதவி வழங்குகிறது.

மற்றைய நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் - சர்வதேச உதவி நிறு வனங்களிடமிருந்து ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டாலர்க ளைப் பெறுவதாக மீள்குடியேற்றப் பிரிவு தெரிவிக்கிறது.

**அழிக்கப்படும் கண்ணிவெடிகள்**

கண்டெடுக்கப்படும் நிலக் கண்ணி வெடிகள், வெடிமருந்துகள் மற்றும் ஏனைய ராணுவ வெடி பொருட்கள் - பொதுமக்களின் கைகளில் சிக்குவதைத் தடுப்பதற்காக, ராணுவத்தின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவினரால் தினந்தோறும் வெடிக்கச் செய்து அழிக்கப்படுவதாக மீள்குடியேற்றப் பிரிவு குறிப்பிடுகிறது.





இதேவேளை, நிலக் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் திலுள்ள 3000க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங் கப்பட்டுள்ளதாகவும் மீள்குடியேற்றப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி ரணிலின்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனென்றால் பேரவை மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது. பொருளாதார ரீதியில் அதே நாடுகளின் மீதே இலங்கை தங்கியிருக்கிறது. அதன் பெரும்பாலான வர்த்தகம் மேற்கு நாடுகளுடனானதாகவே இருக்கிறது.

இலங்கையின் 500 கோடி டொலர்கள் ஆடை உற்பத்தி தொழிற்துறையின் தனியான மிகப்பெரிய சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டம் இலங்கைக்கு முன்னுரிமை வரிச்சலுகையை வழங்குகிறது. இந்த சலுகை தொழில் உறவுகள், சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச விதிமுறைகளுடன் (International Protocol) பிணைக்கப்பட்டதாகும். இந்த விதிமுறைகளை கடைப்பிடிப்பதில் இலங்கையின் செயற்பாடுகள் குறைபாடுடையனவாக இருக்கின்றன.

அடுத்த வருடம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நீடிப்பதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக இலங்கை நிலைவரங்களை ஆராய கடந்த மாதம் கொழும்பு வந்த ஆட்சிமுறை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய செயற்குழு கொடூரமான பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதையும் நீதிவிசாரணையின்றி சந்தேக நபர்கள் தடுப்புக்காவலில் தொடர்ந்தும் வைக்கப்படுவதையும் குறித்து விசனம் வெளியிட்டது. இலங்கை தற்போது எதிர்நோக்குகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடியை மனதிற் கொண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக்கொள்ளாது என்று அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்ற போதிலும், சலுகை விலக்கிக் கொள்ளப்படுவதற்கான கோட்பாட்டளவிலான சாத்தியப்பாடுகள் இருப்பதாக பாலசந்திரன் கூறுகிறார்.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை இழப்பது இலங்கைக்கு பாரதூரமான பாதிப்புக்களைக் கொண்டு வரும். ஆடை உற்பத்தி தொழிற்துறையில் 350,000 பேர் நேரடியாகவும் 700,000 பேர் மறை முகமாகவும் வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். இவர்களில் 80 சதவீதமானவர்கள் கிராமியப் பெண்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் பாரதூரமாக பாதிக்கப்படு பவர்கள் இவர்களே.

இவை எல்லாவற்றையும் நன்கு அறிந்த நிலையிலேயே ஜனாதிபதி விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் ஒத்துழைப்பை பெறும் நோக்கில் புதிய இன நல்லிணக்க செயற்திட்டமொன்றை தொடங்கியிருக்கிறார் என்பது பல அவதானிகளின் அபிப்பிராயமாக இருக்கிறது.

# நாயுடன் சேர்ந்தால் உண்ணிதான் மிஞ்சும்! நரியுடன் சேர்ந்தால் ஏமாற்றமே மிஞ்சும்!

**— பனங்காட்டான்**

மக்களால் தெரிவு செய்யப்படாத முதலாவது இலங்கை ஜனாதிபதி என்ற புகழ் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, தமிழர் பிரச்சனைக்கு (?) தீர்வு காணப்போவதாக அறிவித்ததையடுத்து, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை உள்ளும் புறமும் மோதிக் கொள்ளும் நிலைமையை கச்சிதமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

எந்த விடயத்தை எடுத்தாலும் எதிர்தரப்பை பலவீனப்படுத்தி, அதனூடாக தம்மைப் பலப்படுத்துவதில் கைதேர்ந்தவர் என்பதை தமிழர் விடயத்திலும் ரணில் நிலைநாட்டியுள்ளார். கடந்த நான்கு மாதங்களில் இடம்பெற்ற பல விடயங்களை மையப்படுத்தி இதனைக் குறிப்பிடலாம்.

தம்மை ஜனாதிபதி கதிரைக்குக் கொண்டு வந்த பொதுஜன பெரமுனவுடனும், தம்மை அந்தக் கதிரையிலிருந்து இழுத்து விழுத்த முனையும் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விடயங்களை சாம்பிளாகப் பார்க்கலாம்.

வரவு செலவுத்திட்டத்துக்கு முன்னர் புதிய அமைச்சரவையை நியமிக்க வேண்டுமென்றும், அதில் தாங்கள் குறிப்பிடுபவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டுமெனவும் பெரமுன வலியுறுத்தி வருகிறது. இதற்கு இணங்கும் நிலையில் ரணில் இல்லை. அப்படியென்றால் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாதென்று பெரமுன அச்சுறுத்தியது.

இதற்கு ரணில் சொன்ன பதில் - "அப்படியென்றால் நீங்கள்தான் வீட்டுக்குப் போவீர்கள்" என்பது. இதன் அர்த்தம் வரவு செலவுத் திட்டம் தோல்வியடையுமென்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்போது எம்.பிக்கள் தான் பதவி இழப்பர். ஜனாதிபதி அல்ல என்பது.

சில நாட்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனிமையில் சந்தித்து உரையாடினார். வரவு செலவுத் திட்டம், நாட்டின் பொருளாதார நிலைமை, சர்வதேச கடனுதவி விபரங்கள் பற்றி அலசிய பின்னர், சந்திப்பின் முக்கிய சமாசாரத்துக்கு சஜித் தாவினார். அமைச்சர் பதவிகளை வழங்கி தமது கட்சிக்காரரை அரச தரப்புக்கு இழுக்க வேண்டாமென்பதே சஜித்தின் கோரிக்கை. ஒருவகையில் இது நியாயமானதுதான்.

இதற்கு ரணில் அளித்த பதில் - "நான் ஒருபோதும் எவரையும் அவ்வாறு இழுக்க மாட்டேன். ஆனால் எம்முடன் இணைய விரும்பி வருபவர்களை எவ்வாறு தடுப்பது" என்பதாகும். அதாவது, "உங்கள் வீட்டை நீங்கள்தான் கண்காணித்துக் கொள்ள வேண்டும்" என்ற எச்சரிக்கை ஆலோசனை இது.

ரணிலின் தந்திரோபாய கையாளுகைக்கு இவை இரண்டு உதாரணமும் போதுமானது. இதை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கும் இது பொருத்தமானது என்பதாலேயே.

இந்த மாதம் பத்தாம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது, வடக்கு மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண, வடக்கின் தமிழ் எம்.பிக்களுடன் அந்த மக்களின் பிரச்சனை குறித்து அடுத்த வாரம் பேசவிருப்பதாக ரணில் தெரிவித்தார். இது முக்கியமானதொரு அறிவிப்பாக இருந்ததால் ஊடகங்களுக்கு தலைப்புச் செய்தியானதில் வியப்பில்லை.



இப்போது ஒரு வாரம் கழிந்து விட்டது. எதனையும் காணவில்லை. நாடாளுமன்ற உணவறையில் ரணிலைச் சந்தித்த கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் இதுபற்றிக் கேட்டபோது, இந்த வாரம் பேசலாமே என்று ரணில் பதிலளித்ததாக ஒரு செய்தி. ஆனால் மேற்கொண்டு எதுவும் நடைபெறவில்லை.

இலங்கையின் 75வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி. அந்த நிகழ்வுக்கு முன்னர் வடக்குத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என ரணில் தெரிவித்ததும் வெறும் செய்தியாகவே தொக்கி நிற்கிறது. கூட்டமைப்பின் சம்பந்தனை சுதந்திர தின விழா அரங்கின் முன்வரிசையில் அமரச் செய்யும் யுக்தியாக இது இருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

ரணிலின் அறிவிப்புத் தொடர்பாக தமிழர் தரப்பு வெவ்வேறு விதமாக தங்கள் பிரதிபலிப்பைக் காட்டி வருகிறது. பேச்சுவார்த்தைக்கு முதலில் பச்சைக்கொடி காட்டியவர்கள் கூட்டமைப்பின் சம்பந்தனும் சுமந்திரனும். இதுபற்றி உரையாட மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு "ஐயா அழைக்கிறார், அவரின் கொழும்பு இல்லத்துக்கு வாருங்கள்" என்று சுமந்திரன் அழைப்பு விடுத்தார். இக்கூட்டத்தில் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா தவிர வேறு எவரும் பங்குபற்றவில்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் புறக்கணித்துவிட்டனர்.



இதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிறீதரனும், ரெலோ எம்.பி. வினோநோகராதலிங்கமும் சுமந்திரனை பகிரங்கமாக பிய்த்தெறிந்து சாடியதன் பலாபலன் இதனூடாக தெரிய வந்தது. ஆனால், அவர்களின் கூற்றை மறுதலிக்கும் வகையில், கூட்டமைப்புக்குள் முரண்பாடு கிடையாதென கனவுப் பிதற்றல் போன்று சம்பந்தன் விடுத்த அறிக்கையை, அவரின் முகத்தின் முன்னால் கிழித்தெறிந்தது போன்று கூட்டத்தில் பங்குபற்றாது ரெலோ, புளொட் தலைவர்கள் செயலில் காட்டினர்.

இதனைப் பார்த்து தமது காய் நகர்த்தல் நன்றாக வேலை செய்கிறது என ரணில் நிச்சயம் மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

சம்பந்தனின் இல்லக் கூட்டத்தில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள்

> **சிறிமாவோவின் அரசியலமைப்பு, ஜே.ஆரின் அரசியலமைப்பு, சந்திரிகாவின் பிராந்திய ஒன்றியத் தீர்வு, நல்லாட்சிக் கால அரசியல் வரைபு, கோதாவின் புதிய அரசியலமைப்புத் திட்டம் அனைத்துமே தமிழருக்கு நிவாரணம் அளிக்காத நிலையில், ரணிலின் புதிய அரசியலமைப்பு தமிழருக்கு தீர்வு தருமென நம்ப இடமுண்டா?**

கலந்து கொள்ளாததன் பின்னணியில் மாவையர் இயங்கியது போலவும், சுமந்திரன் அழைப்பு விடுத்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் செய்திகள் உலா வருவதில் உண்மை இல்லாமலில்லை.

இதனைப் புரிந்து கொண்ட சம்பந்தன், கள்வனைக் கொண்டு கள்வனைப் பிடிப்பதுபோல பந்தை மாவையர் பக்கம் அடித்து, அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய கூட்டத்தை பொது இடத்தில் வைக்குமாறும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் மாவையரையே கேட்டுக் கொண்டார். சுமந்திரன் மீதான 'காய்ச்சல்' கூட்டமைப்புக்குள் இருக்கும் அனைவருக்குமே உண்டு என்பதை சம்பந்தன் இவ்வேளை புரிந்து கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

விவகாரம் இத்துடன் முடிந்து விடவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை தாமதிக்காது விரைவாகக் கூட்டுமாறு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் கூட்டாக சம்பந்தனுக்கும் மாவையருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர். கூட்டமைப்புக்குள்ளிருக்கும் அங்கத்துவ கட்சிகளுக்கிடையே பூசல்களும் முரண்பாடுகளும் அதிகரித்து வருவதையும் இவர்கள் இக்கடிதத்தில் குறிப்பிடத் தவறவில்லை. நிலைமை கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள்ளேயே பூசலும் முரண்பாடும் காணப்படுகையில், தமிழ்த் தேசிய கட்சிகளுடன் கூட்டம் நடத்த முனைவதில் அர்த்தமில்லையென்பதை இவர்கள் இருவரும் தங்கள் கடிதத்தின் வாயிலாக பகிரங்கப்படுத்தியுள்ளனர். அது மட்டுமன்றி, கூட்டமைப்புக்குள் எந்த முரண்பாடும் கிடையாதென ஏற்கனவே சம்பந்தன் தெரிவித்தது உண்மைக்குப் புறம்பானது என்பதையும் இவர்களின் கடிதம் அம்பலப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்து கூட்டம் நடத்துவதைவிட, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையும் நம்பிக்கையும் எற்படுத்தப்பட வேண்டுமென்பதையும் இவர்களின் கடிதம் வலியுறுத்தியுள்ளது. சமகாலத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தன் மற்றொரு முக்கிய விடயத்தை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தவேளை அவரால் முன்வைக்கப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற முறை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது இவரது கோரிக்கை.

தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் எந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்?

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய 13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமை, 2015ல் ஆட்சிக்கு வந்த ரணில் - மைத்திரி அரசு கூட்டமைப்பின் பூரண பங்களிப்புடன் நான்கரை ஆண்டுகள் இழுத்தடித்து உருவாக்கிய அரசியலமைப்பு வரைபு, சந்திரிகா குமாரதுங்கா முன்மொழிந்த பிராந்தியங்களின் ஒன்றிய முறை, கோதபாய நியமித்த ஒன்பது உறுப்பி னர்கள் தயாரித்த அரசியலமைப்புத் திட்டம் - இவற்றைவிட இப்போது ரணில் அறிவித்திருக்கும் வடபகுதி மக்களின் பிரச்சனைக்கான தீர்வு முயற்சி.

புரையோடிப் போன இலங்கைத் தமிழர் பிரச்சனையை வடபகுதித் தமிழர் பிரச்சனை என்று ரணில் சுட்டியிருப்பது தற்செயலான சொல்லாடல் அன்று. வடக்கையும் கிழக்கையும் அரசியல் ரீதியாக பிரித்துவிடும் தந்திரோபாயம். கிழக்கு வாழ் தமிழரின் பிரச்சனையில் வடக்குத் தமிழருக்கு சம்பந்தமில்லையென காட்டுகின்ற அரசியல்.

இதனூடாக ஒரு விடயம் நன்றாகப் புரிகிறது. தமிழர் இனப்பிரச்சனைக்கு ரணில் தீர்வு காண விரும்பவில்லை. பொதுஜன பெரமுனவையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் சின்னாபின்னமாக்கி வருவதுபோன்று தமிழர் தரப்பையும் சிதறடிக்க அவர் கையில் எடுத்திருக்கும் கூராயுதமே, வடக்கு தமிழர் பிரச்சனைக்கு தீர்வு என்பது.

பாடசாலையில் கல்வி கற்கும் போது ஆசிரியர் ஒருவர் நாய்க்கும் நரிக்குமுள்ள உறவு என்ன என்று கேட்டு, அதற்கு அவரே அளித்த விளக்கமான பதில் இவ்வேளை நினைவுக்கு வருகிறது.

நாயுடன் சேர்ந்தால் உண்ணிதான் மிஞ்சும். நரியுடன் சேர்ந்தால் ஏமாற்றமே மிஞ்சும். எக்காலத்துக்கும் பொருத்தமான பொன்மொழி.

# மெல்ல கொல்லும் நீரிழிவு...!

நீரிழிவு... இன்று யாழ்ப்பாணத்தை - வடக்கை - இலங்கையை மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகையும் ஆட்டிப் படைக்கும் தொற்றா நோயாகும். சீனி வியாதி அல்லது சர்க்கரை நோய் என்று அழைக்கப்படும் இந்த நீரிழிவு ஒருவருக்கு தொற்றி விட்டால் அது அவரின் வாழ்நாள் முழுவதும் தீவிரமான குறைபாடாகி விடக்கூடியது.

நீரிழிவு ஏற்படுமிடத்து, இரத்த ஓட்டத்தில் உள்ள அனைத்து சீனியையும் (குளுக்கோஸ்) உடலால் செயல்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இதனால், மாரடைப்பு, பக்கவாதம், கண் பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு, காலைத் துண்டிக்கும் பிரச்னைகளுக்கும் இந்த நீரிழவே அடிப்படை.

யாழ்ப்பாணத்தில் 15வீதத்தினர் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறார் யாழ். போதான மருத்துவமனையின் மருத்துவர் ம. அரவிந்தன.

உலகம் முழுவதும் 10 இலட்சம் பேர் ஓர் ஆண்டில் நீரிழிவு தொற்றுக்கு உள்ளாகின்றனர். அண்மைய தரவுப்படி உலகில் 42.2 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 4 தசாப்தங்களில் உச்சம் பெற்று வரும் இந்தத் தொற்றா நோய் எப்படி ஏற்படுகிறது?, இதனால் ஏற்படும் விளைவுகள் - பாதிப்புகள் என்ன? இந்த வியாதியிலிருந்து தப்பிக்க நாம் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இங்கு பேசுகிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

## உடற்பயிற்சி அவசியம்

**மருத்துவர் எஸ். சரவணபவானந்தன்**
**பொது மருத்துவ நிபுணர்,**
**யாழ். போதான மருத்துவமனை.**

நீரிழிவு போன்ற நாள்பட்ட நோய்கள் ஏற்படுவதற்கு சில காரணங்கள் காணப்படுகின்றன.இது தொடர்பான சில தகவல்களை மாணவர்கள், இளைஞர்களுக்கு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்க முடியும்.

சிறுவர்களுக்கும் இளையோருக்கும் ஏற்படும் நீரிழிவு நோய் தாக்கமானது - கடந்த 30 வருடங்களாக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதற்கு மிகவும் முக்கியமான காரணம் அதிக உடல் பருமன், உணவு உண்ணும் பழக்க வழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சி என்பவை காரணமாகின்றன.

நீரிழிவு நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் அது நாள்பட்ட நோயாகக் காணப்படும். பிரதானமாக நமது உணவு பழக்க வழக்கத்தில் உள்ள குறைபாடு காரணமாகவே இந்த உடல்பருமன் மற்றும் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. குறிப்பாக, உணவு பழக்க வழக்கத்தை அன்றாட வாழ்க்கையில் மாற்றிக் கொள்ள வேண்டும். சீனி கலந்த பானங்கள் உணவுகளை அதிகளவில் உட்கொள்ளுதல், நேர காலத்துக்கு உணவு உட்கொள்ளாது நேரம் கழித்து அதிகளவில் உணவு உண்ணுதல் போன்றவையும் காரணமாகும்.

வீட்டில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து உணவருந்தும்போது - சிறுவர்கள், முதியோர்கள் இணைந்து உணவருந்தும்போது எமது உணவு பழக்க முறை மாற்றமடையும். குறிப்பாக, சிறுவர்களுக்கு சில காய்கறிகள் பிடிக்காதிருக்கும் அவர் தனியாக உண்ணும் போது அதனை தவிர்த்து உண்பார். ஆனால், வீட்டில் உள்ள அனைவருடனும் சேர்ந்து உணவு உண்ணும்போது அவர் அதை தவிர்த்தாலும் ஏனையோர் தவிர்க்க விட மாட்டார்கள். தற்போது, கொழுப்பு அதிகம் சேர்ந்த உணவை அதிகமாக தற்காலத்தில் உண்டு வருகின்றோம். இது மிகவும் பாதிப்பான விடயமாகும்

அத்துடன், உணவு உண்ணும் போது சிறுவர்கள் அதிகளவில் சீனி பண்டங்களை உண்கின்றார்கள். இது எதிர்காலத்தில் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, தற்போது உள்ள இளைஞர்கள் தாங்கள் சீனி பானங்கள், அது சேர்ந்த உணவுகளை அதிகளவில் எடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உணவு மட்டுமின்றி எமது உடற்பருமனில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். உடல்பருமன் அதிகமாக இருக்குமாக இருந்தால் தொற்றா நோய்கள் அனைத்தும் ஏற்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சியை மேற்கொண்டு நீங்கள் ஏனைய கடமைகளை வழக்கமாகக் கொண்டு செயல்பட்டால் உங்களுக்கு தொற்றாநோய்கள் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளது. தற்காலத்தில், உடற்பயிற்சி செய்பவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. கொரோனா தொற்று காலத்தின் பின்னர் வீடுகளில் இருந்தபோது பலர் உடற்பயிற்சி - வீட்டு வேலைகளை செய்யாமலிருந்தனர். இந்த சிறு மாற்றத்தால் இப்போது நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

## யாழில் 15 வீதத்தினருக்கு நீரிழிவு!

**மருத்துவர் ம. அரவிந்தன்,**
**நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர்,**
**யாழ். போதனா மருத்துவமனை.**



நீரிழிவு நோய் குறித்த மிக அண்மைய தரவுகளின்படி கொழும்பில் - குறிப்பாக மேல் மாகாணத்தில் 30 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோயுள்ளது. இது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15வீதமானோரை தாக்கியுள்ளது.

நீரழிவு நோய் தொடர்பிலான ஆய்வுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம். குறிப்பாக, கடந்த இரண்டு மூன்று வருடங்களாக - கோவிட் காலப் பகுதியில் இளைஞர், யுவதிகள் அதாவது 20 - 40 வயதுக்கு உட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது

யாழ். போதனா மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சை பிரிவை எடுத்துக் கொண்டால் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3000இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் புதிதாக பதிவாகியிருக்கிறார்கள். அதாவது, நீரிழிவு நோயின் தாக்கம் சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்கிறது.

உலகளாவிய ரீதியில் அதிகரிப்பது போல வளர்முக நாடுகளில் - குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் எமது வடபகுதியில் இந்த நீரிழிவு நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது. நவம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் நீரிழிவு விழிப்புணர்வு வாரமாகக் கொண்டாடப்படுகின்றது. குறிப்பாக, இந்த உலக நீரிழிவு விழிப்புணர்வு வாரத்தில் யாழ். மாவட்டத்தில் பல செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

மிக முக்கியமாக பாடசாலை, கல்லூரி மாணவர்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதுவது அவசியம். வடக்கில் இளைஞர், யுவதிகள் மத்தியில் நீரிழிவின் தாக்கமானது அதிகரித்து செல்கிறது. இவ்வாறு நீரிழிவு நோய் தாக்கம் அதிகரிக்க மிக முக்கியமான காரணமாக அமைவது எமது வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறை, என்பன மிக முக்கியமான காரணங்களாகவுள்ளன.

இன்றைய காலகட்டத்தில், மேலைத்தேய உணவுகள் துரித உணவுகளில் நாட்டம் அதிகரித்து செல்வதனால் நீரிழிவின் தாக்கமானது அதிகரித்து செல்கிறது. இதே போல உடற்பயிற்சி செய்வது குறைவடைவதும் மிக முக்கியமான காரணமாகும்.

இதேபோல் மன அழுத்தம், நித்திரை குறைவு போன்ற பல காரணங்களும் இதற்கு ஏதுவாக அமைகின்றன. ஆகவே, நீரிழிவு விழிப்புணர்வு மாதத்தில் மக்களுக்கு நீரிழிவு நோய் என்றால் என்ன என்பது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். நீரிழிவு நோய் ஏற்படும்போது சில அறிகுறிகள் ஏற்படும். அந்த அறிகுறிகளை நாங்கள் அடையாளம் கண்டு உரிய முறையில் சிகிச்சை மேற்கொள்ளும் போது குறித்த நோயிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## நமது "சோடா" பாரம்பரியமும் காரணம்!

நாட்டில் வளர்ந்தவர்களில் நான்கில் ஒருவருக்கு நீரிழிவு - நீரிழிவுக்கு முற்பட்ட நிலை இருந்து வருகின்றமை பெரும் பிரச்னையாகக் காணப்படுகின்றது. இந்த நிலை ஏன் வந்தது? இதற்கு இரண்டு பிரதானமான காரணங்கள்.

ஒன்று, அதிகரித்த உடல் நிறை மிக முக்கியமான காரணம். இரண்டாவது பிழையான வாழ்க்கை முறை. இந்த இரண்டு விடயங்களும்தான் நீரிழிவு நோய் பெருகி அதனால் ஏற்படும் தாக்கங்களும் அதிகரிக்கக் காரணமாகவுள்ளன.

இந்தப் பிழையான வாழ்க்கை முறையில் சிறுசிறு மாற்றங்களை நாங்கள் செய்வோமாக இருந்தால், அவற்றின் அநுகூலங்கள் மிகவும் பெரியதாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் திருமண நிகழ்வுகளில் "சோடா" (மென்பானம்) பரிமாறப்படுகின்றது. ஒவ்வொரு கல்யாண வீடுகளிலும் பெருமளவு "சோடா" பரிமாறப்படுகின்றது. மரண வீடுகளில் கூட சோடா பரிமாறப்படுகின்றது. இது நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு ஒரு தூண்டுகோலாக அமைகின்றது.


இந்த சின்னச்சின்ன முறைகளை மாற்றிக் கொள்ளலாமா? என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும் அதே போல மேலதிகமாக குடிவகை - போதைப் பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது. இதுவும் நீரிழிவு நோய் ஏற்படும் வீதத்தை அதிகரிக்கின்றது. குடி வகையாக இருந்தால் என்ன போதைப் பொருட்களாக இருந்தால் என்ன அவை இன்சுலின் தொழில்படும் வீதத்தைக் குறைக்கின்றது. குறைக்கும்போதுதான் இந்த நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்பாக அமைகின்றது.

நீரிழிவு நோயை தடுக்க, சிறியவர்கள் - வளர்ந்தவர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்ற உணர்வு குறைந்து வருகின்றது. இதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்றாட உடற்பயிற்சியை செய்வோமாக இருந்தால் எமது உடல் நிறையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். அதேபோல், நீரிழிவு உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களிலிருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக ஏற்படும் மேலும் பல நோய்களிலிருந்தும் நாங்கள் எங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.



**மருத்துவர் எஸ். சிவன்சுதன்,**
**யாழ். போதனா மருத்துவமனை.**

# பொன்னியின் செல்வன் 2 ஏப்ரலில்




அமரர் கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் சரித்திர நாவலை இரண்டு பாகங்களாக இயக்கி இருக்கிறார் மணிரத்னம். இதன் முதல் பாகம் கடந்த செப்ரெம்பர் 30ம் திகதி திரைக்கு வந்தது.

விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, சரத்குமார், பிரபு, த்ரிஷா, ஐஸ்வர்யா ராய் உட்பட பலர் நடித்திருந்த இந்த படம் 50 ஆவது நாளை கடந்துள்ளது. அத்துடன், உலகளவில் இந்த படம் 500 கோடி இந்திய ரூபாய் வசூலை எட்டியுள்ளது.

முதல் பாகத்துக்கு கிடைத்த அதே வரவேற்பு இரண்டாம் பாகத்துக்கும் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் முதல் பாகம் தயாரான போதே இரண்டாம் பாகமும் தயாராகி விட்டது. தற்போது பிற பணிகள் இடம்பெறுகின்றன. இரண்டாம் பாகம் எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதி வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.




# நயன்தாரா 81

நயன்தாராவின் பிறந்தநாளை முன்னிட்டு அவர் நாயகியாக நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நயன்தாராவின் நடிப்பில் உருவாகும் 81ஆவது படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

விக்னேஷ் சிவன் தயாரிக்கும் இந்தப் படத்தை எதிர்நீச்சல், காக்கிச்சட்டை, கொடி உள்ளிட்ட படங்களை இயக்கிய துரை செந்தில்குமார் இயக்கவுள்ளார்.



# மீண்டும் சேரும் கூட்டணி

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த விக்ரம் படத்தில் அவருடன் இணைந்து விஜய் சேதுபதி, பஹத் பாசில் போன்றவர்களும் முக்கிய வேடங்களில் நடித்திருந்தார்கள்.

தற்போது இந்தியன்2இல் நடிக்கும் கமல் அடுத்து, எச்.வினோத் இயக்கும் இன்னொரு படத்திலும் நடிக்கப் போகிறார். இந்த படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

மேலும் விக்ரம் படத்தில் வில்லனாக நடித்த விஜய் சேதுபதி மீண்டும் இந்த படத்திலும் எதிர்மறை படத்தில் நடிக்கப்போகிறார். கமலின் 233வது படமான இப்படம் குறித்த அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

# இணையும் கமல் - விஜய்

கமல்ஹாசன் தயாரித்து நடித்த விக்ரம் படத்தை இயக்கிய லோகேஷ் கனகராஜ் அடுத்து, விஜயை வைத்து விஜய் 67ஆவது படத்தை இயக்கப் போகிறார்.

இந்த படத்தில் விஜய்யுடன் அர்ஜூன், சஞ்சய் தத், கௌதம் மேனன், மிஷ்கின், பிருத்விராஜ், மன்சூர் அலிகான், த்ரிஷா, கீர்த்தி சுரேஷ் என ஒரு மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடிக்கவுள்ளது.

இந்தப் படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் நிறுவனத்துடன் இணைந்து கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிக்கவுள்ளதாக புதிய தகவல் ஒன்று வெளியாகி இருக்கிறது. இதில் கமலும் கௌரவ தோற்றத்தில் நடிக்கவுள்ளாராம்.

# புஷ்பா 2இல் காஜல்?

தெலுங்கில் அல்லு அர்ஜூன் நடிப்பில் வெளியான படம் பெரு வெற்றி பெற்றது. தற்போது புஷ்பா-2 படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இரண்டாம் பாகத்திலும் ராஷ்மிகா மந்தனாவே நாயகியாக நடிக்கிறார்.

இந்நிலையில், முதல் பாகத்தைப் போலவே பாடல் ஒன்றில் ஆடுவதற்காக சமந்தாவை மீண்டும் அணுகிய போது அவர் மறுத்து விட்டார். இதையடுத்து புஷ்பா -2 படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாட தற்போது காஜல் அகர்வாலை அணுகி படக்குழு பேச்சு நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.






**திரைப்படம் - யசோதா**
**இயக்கம் - ஹரி - ஹரிஷ்**
**இசை - மணி சர்மா**
**நடிப்பு - சமந்தா, வரலட்சுமி சரத்குமார், உன்னி முகுந்தன்**

தெலுங்கில் சமந்தா முதன்மைக் கதாநாயகியாக நடித்த "யசோதா" படத்தை தமிழிலும் அதே பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சமந்தா, வரலட்சுமி, உன்னி முகுந்தன், சம்பத் என தமிழிலும் நடித்துள்ள நட்சத்திரங்கள் படத்தில் இருப்பதால் ஒரு நேரடிப் படத்தைப் பார்க்கிறோம் என்றே எண்ண வைக்கிறது. வசனங்களையும் உதட்டசைவுகளுக்குப் பொருத்தமாக எழுதி சமாளித்திருக்கிறார்கள். அதையெல்லாமும் கவனத்தில் கொள்ளாத அளவுக்கு படமும் பரபரப்பாகவே நகர்கிறது.

"வாடகைத் தாய்" விவகாரத்தை வேறு ஒரு கோணத்தில் கொடுத்து விறுவிறுப்பாக ரசிக்க வைத்திருக்கிறார்கள் இயக்குநர்கள் ஹரி – ஹரிஷ்.

தன் தங்கையின் சத்திர சிகிச்சைக்கு பணம் தேவைப்பட, அதற்காக வாடகைத் தாயாக சம்மதித்து செல்கிறார் சமந்தா. இப்படி வாடகைத் தாய் ஆக வரும் பெண்களை நட்சத்திர விடுதி போல வசதிகளை செய்து கொடுத்து பார்த்துக் கொள்ளும் வர்த்தகம் செய்கிறார் வரலட்சுமி. அங்கு மருத்துவராக இருக்கிறார் உன்னி முகுந்தன். அதிக கட்டுப்பாடுகளுடன் இருக்கும் ஒரு விடுதி அது. அந்த விடுதி எங்கு இருக்கிறது என்பதுகூட அங்கு வாடகைத் தாயாக செல்பவர்களுக்குத் தெரியாது.

அனைத்து மருத்துவ வசதிகளும் அங்கு உண்டு. தன்னுடன் வாடகைத் தாயாக இருக்கும் ஒரு பெண்ணுக்கு திடீரென வலி எடுக்க, அவரை அழைத்துச் செல்கிறார்கள். ஆனால், அந்தப் பெண் திரும்பி வரவில்லை. அதைப் பற்றி தெரிந்து கொள்ள முயற்சிக்கிறார் சமந்தா. அவருக்கு அதிர்ச்சியான சில உண்மைகள் தெரிய வருகின்றன. அது என்ன என்பது தான் படத்தின் மீதிக் கதை.

வாடகைத் தாய், பெண்களின் அழகு குறையாமல் இருக்க ஆராய்ச்சி, அதனால் நடக்கும் சர்வதேச வர்த்தகம், மத்திய மந்திரி ஒருவர் அதில் சம்பந்தப்பட்டிருப்பது, அக்கா, தங்கை பாசம், காவல்துறை விசாரணை என ஒரு வர்த்தக – சண்டை படத்துக்கான சகல விசயங்களையும் படத்தில் வைத்திருக்கிறார்கள். சில அதிகபிரசங்கித்தனமான காட்சிகளை தவிர்த்தால் சிறந்த திரைப்படம்தான்.

சமந்தா ஆரம்பத்தில் அப்பாவியான ஓர் அக்காவாக வருகிறார். உடல் நலம் குன்றிய தனது தங்கையின் சிகிச்சைக் செலவு செய்வதற்காக வாடகைத் தாயாக போகிறார். அங்கு விடுதியில் மருத்துவராக இருக்கும் உன்னி முகுந்தன் மீது காதல் வயப்பட்டு கிண்டல் செய்து பழகுகிறார். உடன் இருக்கும் மற்றொரு பெண்ணுக்கு என்ன ஆனது என்பது தெரியாமல் போனதும் களத்தில் இறங்குகிறார். திடீரென அதிரடியாக சண்டை போடவும் ஆரம்பிக்கிறார். அவர் யார் என்ற உண்மை தெரிய வரும் போது நமக்கும் அதிர்ச்சிதான், எதிர்பாராத திருப்பம் அது. அதிரடி நாயகியாக மாறி, சண்டைக் காட்சிகளிலும் அசத்தியிருக்கிறார் சமந்தா.

வாடகைத் தாய்களை ஏற்பாடு செய்து அவர்களுக்காக பிரமாண்டமான நட்சத்திர விடுதி, மருத்து வசதி, அதிகபட்ச பாதுகாப்பு என கட்டுப்பாடுகளுடன் கூடிய வர்த்தகத்தை செய்கிறார் வரலட்சுமி. தமிழில் வந்த "சர்க்கார்" படத்தில் எதிர்மறை கதா பாத்திரத்தில் நடித்து மிரட்டியவர் இந்தப் படத்திலும் மிரட்டியிருக்கிறார். அவரிடம் மருத்துவராக வேலை பார்ப்பவர் உன்னி முகுந்தன். அவருக்கும் சமந்தாவுக்கும் காதல் வருமோ என நாம் எதிர்பார்க்கும் நேரத்தில் உன்னி, வரலட்சுமியின் காதலர் என்ற மற்றொரு திருப்பம். இடைவேளைக்குப் பின் இப்படி பல திருப்பங்கள் படத்தில் உண்டு.

இரண்டு பிரபலங்களின் திடீர் மரணத்தை விசாரிக்க காவல்துறை பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த சம்பத் உதவி செய்ய, அங்கிருந்து கதை நகர்ந்து வாடகைத் தாய் விசாரணையில் வந்து முடிகிறது. இரண்டையும் திரைக்கதையில் அருமையாக முடிச்சு போட்டிருக்கிறார்கள். பொலிஸ் ஆய்வாளராக முரளி சர்மா, மத்திய மந்திரியாக ராவ் ரமேஷ் கொஞ்ச நேரம் வந்தாலும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள்.

படத்தில் பாடல்களுக்கு முக்கியத்துவம் தரவில்லை. மணிசர்மாவின் பின்னணி இசை படத்தை பரபரப்பாக நகர்த்த உதவுகிறது. அந்த விடுதி, அதன் பிரமாண்டம், அதற்கான ஒளிக்கலவை என ஒளிப்பதிவில் குறிப்பிட வைக்கிறார் ஒளிப்பதிவாளர் சுகுமார். குழப்பமில்லாமல் படத்தைத் தொகுத்திருக்கிறார் எடிட்டர் மாத்தாண்ட கே வெங்கடேஷ். வெங்கட்டின் சண்டைக் காட்சிகள் அசத்தல்.

படத்தில் ஆங்காங்கே சில பல யதார்த்த மீறல்கள். சினிமாத்தனமான காட்சிகள் இருந்தாலும் புதுவிதமான கதை, கதைக்களம் அந்த அவற்றையும் சுவாரசியமாக்கியுள்ளது.

# உதைபந்தாட்ட உலக கிண்ணம்

## இன்று கோலாகல தொடக்கம்!



கட்டாரில் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக தொடங்குகிறது. பிரேஸில் ஆறாவது முறையாக சம்பியன் பட்டம் வெல்லுமா, ஆர்ஜென்ரீனா அசத்துமா, பிரான்ஸ் கிண்ணத்தைத் தக்க வைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

உலகின் அழகான விளையாட்டு உதைபந்தாட்டம். வலுவான கால்களும், தளராத மனஉறுதியும் இருந்தால், நட்சத்திர வீரராக உச்சம் தொடலாம். போட்டியின் ஒவ்வோர் அசைவும் விறுவிறுப்பாக இருக்கும். கடைசி விநாடியில்கூட கோல் அடிக்கப்பட்டு காட்சிகள் மாறும்.

அனைத்து நாட்டு உதைபந்தாட்ட ரசிகர்களையும் கவர, உலகக் கிண்ணத் தொடர் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும்.



பாலைவனங்கள் மிகுந்த கட்டாரில், 22ஆவது உலகக் கிண்ணத் தொடர் இன்று தொடங்குகிறது. இதில், 32 அணிகள் மோதுகின்றன. எதிர்வரும் டிசெம்பர் 18ஆம் திகதி இறுதிப் போட்டி நடக்கும்.

**நாயகன் நெய்மர்**

உலகக் கிண்ணம் வெல்லக்கூடிய அணிகளில் வழக்கம் போல் பிரேஸில் முந்துகிறது. உலகக் கிண்ணத்தை வென்று 20 ஆண்டுகளான நிலையில், இம் முறை பன்முக திட்டத்துடன் களமிறங்கியுள்ளது. முன்கள வீரர் நெய்மர்தான் பெரும் பலம். டியாகோ சில்வா, டேனி அல்வ்ஸ், வினிசியஸ் ஜூனியர், ரொட்ரிகோ, ரிச்சர்லிசன், கேபிரியல் ஜீசஸ், மார்ட்டினலி, பெத்ரோ என பல நட்சத்திரங்கள் உள்ளனர்.

**மெஸ்ஸி மந்திரம்**

ஆர்ஜென்ரீனாவை பொறுத்தவரை கடந்த 35 போட்டிகளில் தோல்வியே சந்திக்காமல் உள்ளது. 2021இல் கோபா அமெரிக்கா தொடரில் பிரேஸிலை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது. இதே உற்சாகத்துடன் கட்டாரிலும் சாதிக்கக் காத்திருக்கிறது. மெஸ்ஸி பம்பரமாக சுழன்று ஆடினால், சம்பியன் பட்டம் வசப்படும். மார்டினஸ், ரொமேரா, ஏஞ்சல் டி மரியா, அலிஸ்டர் மிரட்டலாம்.

**பிரான்ஸ் செம 'சான்ஸ்'**

கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற பிரான்ஸ் அணிக்கு 'சுப்பர் ஸ்டார்' எம் பாப்வே, பாக்போ, கொன்டே பலம் சேர்க்கின்றனர். தொடைக் கால் தசைப் பிடிப்பால் பென் சிமா அவதிப்படுவது பலவீனம்.



இங்கிலாந்து அணியும் வலுவாக உள்ளது. 2018இல் உலகக் கிண்ண அரையிறுதி, 2020இல் யூரோ கிண்ண இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. கடந்த முறை 'தங்க காலணி' விருது வென்ற ஹேரி கேன், இளம் ஜூட் பெல்லிங்காம், பில் போடன், மெக்கியுர், சாகா, டெக்லான் ரைஸ் நம்பிக்கை தருகின்றனர்.

நான்கு முறை சம்பியனான ஜேர்மனி மீதும் எதிர்பார்ப்பு உள்ளது. கிளின்ஸ்மேன், குளோஸ் போன்ற நட்சத்திர வீரர்கள் இல்லை. இருப்பினும் 36 வயது கோல்காப்பாளர் மனுவல் நுாயர், 19 வயது 'நடுக்கள' ஜமால் முசியல்லா, ருடிகர் பலம் சேர்க்கின்றனர். லுாயிஸ் என்ரிக், பெர்ரான் டோரஸ் அடங்கிய ஸ்பெயின், பெல்ஜியமும் சாதிக்கலாம்.

**ராசியான ரொனால்டோ**

போர்த்துக்கல் அணி கிறிஸ்டியானோ ரொனால்டோவை நம்பி களமிறங்குகிறது. புருனோ பெர்னாண்டஸ், பெர்ணார்டோ சில்வா, அனுபவ வீரரான பெப்பே, ஜோவா பெலிக்ஸ் மிரட்டலாம். முதல் கிண்ணத்தை வென்ற உருகுவேக்கு எடின்சன் கவானி, டியாகோ காடின், லுாயிஸ் சாரஸ் அசத்தலாம். 'கறுப்பு குதிரையாக' கருதப்படும் போலந்து அணிக்கு லெவண்டோவ்ஸ்கி, குரோஷியாவுக்கு லுாகா மோட்ரிச் கைகொடுக்கலாம்.



சொந்த மண்ணில் கட்டார், செனகல், அவுஸ்திரேலியா, சவுதி அரேபியா, ஜப்பான், டென்மார்க், தென் கொரியா உட்பட மற்ற அணிகளும் சாதிக்க காத்திருக்கின்றன. கட்டாரில் புதிய உலக சம்பியனாக உருவெடுக்க போவது யார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தொடக்க நாளான இன்று ஏ பிரிவில் உள்ள கட்டார் - ஈக்குவடோர் அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி இன்று இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

தொடக்க விழாவில் பிரபல பி.டி.எஸ். பாடகர் ஜங்குக் மற்றும் அமெரிக்க குழுவான ஐட் பீஸ் ஆகியோர் பங்கேற்கிறார்கள். இங்கிலாந்து பாடகர் பதேகி வில்லியம்ஸ், நோரா பதவி ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். கொலம்பிய பாடகி ஷகிரா தொடக்க விழாவில் கலந்து கொள்ள இருந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் விலகினார்.

## அணிகளின் தலைவர்கள் யார்?

இன்று ஞாயிற்றுக்கிழமை அன்று பிபா உலகக் கிண்ணத் தொடர் கட்டார் நாட்டில் கோலாகலமாக தொடங்கவுள்ளது. இந்த தொடரில் 32 நாடுகளை சேர்ந்த அணிகள் விளையாட உள்ளன. இந்த நிலையில் இந்த அணிகளின் தலைவர்கள் யார், யார்? என்பது குறித்த முழு விவரம் இங்கே..

உதைபந்தாட்டத்தை கூர்ந்து கவனித்து வரும் ரசிகர்களுக்கு இந்த பெயர்கள் பரிச்சயமானதாக இருக்கலாம். தங்களுடன் தங்கள் நாட்டு வீரர்கள், மக்கள் என அனைவரது கனவையும் சுமந்து செல்லும் அணித் தலைவர்களின் நெஞ்சம் உறுதியானது. இந்த பணியை மெஸ்ஸி தொடங்கி லுாகா மோட்ரிச் வரை பல அனுபவ வீரர்கள் கவனித்து வருகின்றனர்.

பிரேஸில் - டியாகோ சில்வா
பெல்ஜியம் - ஈடன் ஹசார்ட்
பிரான்ஸ் - ஹியூகோ லொரிஸ்
ஆர்ஜென்ரீனா - மெஸ்ஸி
இங்கிலாந்து - ஹேரி கேன்
ஸ்பெயின் - செர்ஜியோ
போர்த்துக்கல் - கிறிஸ்டியானோ ரொனால்டோ
மெக்சிக்கோ - அண்ட்ரேஸ்
நெதர்லாந்து - விர்ஜில் வான் ஜிக்
கட்டார் - ஹசன் அல்-ஹய்டோஸ்
ஈரான் - ஹஜ் சஃபி
டென்மார்க் - சைமன்
ஜேர்மனி - மனுவல் நியூயர்
கனடா - அதிபா
உருகுவே - டிகோ
சுவிற்சர்லாந்து - கிரானிட்
அமெரிக்கா - கிறிஸ்டியன்
குரோஷியா - மோட்ரிச்
செனகல் - கலிடோ
ஜப்பான் - மாயா யோசிதா
மொராக்கோ - ரோமைன் ஹய்ஸ்
சேர்பியா - துசன் டேடிக்
போலந்து - லெவோண்டஸ்கி
தென் கொரியா
துனிசியா - யூஸப்
கமரூன் - வின்சென்ட்
ஈக்குவேடார் - என்னர் வலன்சியா
சவுதி அரேபியா - சல்மான் அல்-ஃப்ராஜ்
கானா - அன்ட்ரே
வேல்ஸ் - கரெத்
கோஸ்டாரிக்கா- பிரையன் ரூயிஸ்
அவுஸ்திரேலியா - மட் ரியான்

# கனடா - மகாஜனா பழைய மாணவர்களின் ரொறன்ரோ நிகழ்வுகள்

-குரு அரவிந்தன்



கனடாவில் வசிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் இரண்டு நிகழ்ச்சிகள் சென்ற வாரம் ரொறன் ரோவில் இடம் பெற்றிருந்தன. ஒன்று நூல் அறிமுகவிழா, மற்றது விருது வழங்கல் விழா. இந்த இரண்டு நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக நடந்தேறின. விருது வழங்கல் விழாவில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்று, போட்டியில் வெற்றிபெற்ற துடுப்பாட்ட வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. வருகை தந்தோருக்குச் சிற்றுண்டியும் இரவு உணவும் வழங்கப்பட்டன.

நூல் அறிமுக விழாவில் ‘வாழ்வு தந்த மகாஜனா’ என்ற தலைப்பைக் கொண்ட நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த நூல் முதன் முதலாக யூலை மாதம் 31ஆம் திகதி 2022 அன்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது, முதல் பிரதியைக் கல்லூரி அதிபர் திரு ம. மணிசேகரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். கனடாவில் அறிமுகம் செய்யப்பட்ட போது முதல்பிரதியை பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு க. புவனச்சந்திரா, மற்றும் எழுத்தாளர் குரு அரவிந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இந்த நூலை கி. ஜெய்சந்தர், கலாநிதி தமிழினி வாமதேவன், குமுதினி சிறீதரன், செ. சுஜிகரன் ஆகியோர் வடிவமைத்திருக்கிறார்கள். 1988 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் படித்தவர்களும், 1991 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தாராதர உயர் வகுப்பில் படித்தவர்களும் இணைந்து, பொன் அகவையை முன்னிட்டுத் தங் கள் காலத்துப் பள்ளி அனு பவங்களை இந்த நூலில் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.





அறிவு தந்த அதிபர்களுக்கும், சிகரங்களில் ஏற்றி வைத்த ஆசிரியர்களுக்கும் இந்த நூலைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். கல்வி தந்த விருட்சத்தின் அடையாளம், மலர் மீது பூமாலைகள், மகாஜனாவின் மீகாமன்கள், ஆளுமைதந்த சிகரங்கள், துணைநின்ற விழுதுகள், விட்டுப் பிரிந்த குருவிகள், நினைவுத்துளிகள் எழுதிய வரிகள், ஆதரவுக் கரங்கள், தடம் பதித்தவர்கள், வாழ்க்கைப் பயணங்கள், நினைவு நிழல்கள் போன்ற தலைப்புக்களில், புகைப் படங்களுடன் உள்ளடக்கம் இடம் பெற்றிருக்கின்றது. தடம் பதித்தவர்களில் மகாஜனாவின் இலக்கிய ஆளுமை கொண்ட ‘நவரத்தினங்களின்’ ஒன்பது படங்களும், விட்டுப் பிரிந்தவர்களில் மாவீரர்களின் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

நூற்றாண்டு கண்ட மகாஜனக் கல்லூரியின் ஒரு காலக்கட்ட வரலாற்றை வண்ணப் படங்களுடன் எடுத்துக் காட்டும் இந்த நூல் வருங்காலத்தில் ஒரு ஆவணமாக நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. இந்த நூலைச் சிறப்பாக வெளியிட்ட மலர்க்குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்கள் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**ரவீந்திரன் சந்திரன், பார் வீதி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தலைவர்கள் ஒரு போதும் ஒற்றுமைப் படப் போவதில்லை என்றும் தனது அனுபவத்தில் அரசியல் தீர்வுக்காக தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக ஏதோ அரசியல் நடந்து கொண்டு இருக்கிறதே தவிர, உரிமைக்காக தமிழ் தலைவர்கள் அக்கறையுடன் செயற்படவில்லை என்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் விநோ சொல்வது சரியா?.

**வியுக்தியார்:** என்ன கேள்வி இது சந்திரன். நான் வேலை செய்யவில்லை ஈழநாடு முதலாளியிடம் சம்பளம் மட்டும் தான் பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்றுநான் சொன்னால் நம்பமாட்டீர்களா?. அவரே மற்றவர்கள் மட்டுமல்ல தானும் அக்கறையில்லாமல் தான் இருக்கிறேன் என்று சொன்ன பின்னர், நாம் ஏன் சந்தேகப்படுவான்? தன்னைப் பற்றி மட்டுமல்ல, தனது சகாக்கள் பற்றியும் அவர் அறிந்து வைத்திருப்பார்தானே?

---

**துஷி சிவசுதன், ஏழாலை மேற்கு, ஏழாலை.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று பேச்சுக்கு தமிழ்க் கட்சிகள் செல்வதாயின் ஜனாதிபதியிடம் நிபந்தனைகளை முன் வைக்க வேண்டும் என்று சுதந்திர மக்கள் சபையின் டலஸ் அழகப்பெரும எம். பி. தெரிவித்துள்ளாரே, நமது தமிழ் கட்சிகள் நிபந்தனை விதிப்பார்களா?

**வியுக்தியார்:** அப்படி நிபந்தனை விதித்தால் தானே ரணில் தமிழ்களுக்கு உரிமையைக் கொடுக்கப் போகிறார், நாட்டைப்பிரிக்கப்போகிறார் என்று அவரோடு இருக்கும் அவரது சகாக்கள் ரணிலுக்கு எதிராக பிரச்சாரம் செய்ய உதவியாக இருக்கும் என்று கருதுகிறார் போலும். அவரது பேச்சைக்கேட்டு நிபந்தனை விதிக்க நமது தலைவர்கள் என்ன முட்டாள்களா? இப்படித்தான் கேட்கலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் டலஸ் இவ்வாறு சொன்ன மறுதினமே நமது முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் நிபந்தனை விதித்துவிட்டாரே கவனிக்கவில்லையா?

---

**ஈஸ்வரன் ரவி, சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** எமது மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக கட்சி வேறுபாடுகளை புறம்வைத்து அனைவரையும் உரையாடுவதற்கு சம்பந்தனின் இல்லத்திற்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தாரே. ஏன் அந்த அழைப்பை மற்றயை கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை?

**வியுக்தியார்:** சம்பந்தன் இப்படியொரு கூட்டத்தை கூட்ட விரும்பியிருந்ததாகவும், அவரே கேட்டுக்கொண்டதால்தான் சுமந்திரன் அழைப்பு விடுத்ததாகவும் பின்னர் செய்திகளில் பார்த்தேன். இது எதைக் காட்டுகின்றது என்றால், வெளியே தனது கட்சிக்குள் நடப்பவை கூட சம்பந்தனுக்கு தெரிந்திருக்கவில்லை என்பதைத்தானே? சுமந்திரன் இப்படியொரு அழைப்பு விடுத்தால் தமது பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல, தமது தமிழரசுக்கட்சிக்குள்ளேயே பலருக்கு பிடிக்காது என்ற விடயத்தை கூட சம்பந்தன் அறிந்திருக்கவில்லையே என்பது தான் இப்போது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றது. அந்த கூட்டத்திற்கான அழைப்பை சம்பந்தனே விடுத்திருந்தால் எல்லோரும் போயிருப்பார்கள். அதிகம் ஏன் சம்பந்தன் இப்படியொரு கூட்டத்தை கூட்டுமாறு தன்னைக் கேட்டதற்கிணங்கத்தான் தான் அழைப்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தால் கூட எல்லோரும் போயிருப்பார்கள் என்றே நினைக்கின்றேன். அடுத்த கூட்டத்தை கூட்டும் பொறுப்பு மாவையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

---

**இரா. ராஜ்குமார், நெல்லியடி, கரவெட்டி.**

**கேள்வி:** ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவு திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதிலில்லை, வரிக்கு மேல் வரி விதிப்பை மக்களால் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியிருப்பது சரிதானே. மக்கள் பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது இவ்வாறு வரிகளையும் அதிகரித்தால் மக்கள் எப்படி தாங்கிக் கொள்வது?

**வியுக்தியார்:** முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வரிகளை ரத்துச் செய்ததால்தான் நாடு பொருளாதார நெருக்கடியில் விழுந்தது என்றும் அப்போது குறைசென்னவர் இந்த சஜித் பிரேமதாசா தானே? வரியை ரத்துச் செய்தால் அதனால்தான் நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்தது என்று சொன்னவர், இப்போது வரியை கொண்டுவந்தால், மக்கள் எப்படி தாங்குவது என்கிறார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் அரசாங்கம் எதைச் செய்தாலும் அதை எதிர்க்க வேண்டும் என்று நினைக்கிறாரோ தெரியவில்லை.

---

**வி. காந்தன், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது அறிமுகம் செய்த பிராந்தியங்களின் ஒன்றியம் தீர்வுத் திட்டம் ஓரளவுக்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனவே, அதனை மீண்டும் எடுத்து, நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்திருக்கிறாரே. அது என்ன திட்டம் என்பது வியுக்தியாருக்கு தெரியுமா?

**வியுக்தியார்:** இதுவரை சிங்கள ஆட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளிலேயே சிறந்தது அது என்றுதான் பலரும் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால், அதனை பாராளுமன்றத்தில் சந்திரிகா அரசு சமர்ப்பித்தபோது அதன் பிரதியை தீயிட்டுக்கொழுத்தியது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி. நமது இன்றைய ஜனாதிபதிதான் அப்போதும் அந்தக் கட்சிக்கு தலைவராக இருந்தார். அதைவிட முக்கியமானது ஐக்கிய தேசியக்கட்சி அதனை பாராளுமன்றத்தில் தீயிட்டு கொழுத்தி எதிர்ப்பு வெளியிட்டபோது நமது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அவர்களுக்கு ஆதரவாக இருந்தார் என்பதுதான். சித்தர் தனது தலைவரிடம் கேட்டுத்தான் அதனை அமுல் படுத்த கேட்கிறாரா என்பதுதான் தெரியவில்லை.

ஈழநாடு



# பருத்தித்துறைக் கடற்பரப்பில் தோன்றிய வானிலை நீர்த்தம்பம்: சில அவதானிப்புகள்

**எஸ். அன்ரனி நோர்பேட்**
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

சுருள் தன்மை கொண்ட வளி நிரலாக எழுச்சியடையும் போது புகார் தன்மை கொண்ட நீர்ச் சுழலையும் கொண்டதாகக் காணப்படும் வானிலைத் தோற்றப்பாடே சில நாட்களுக்கு முன் பருத்தித்துறைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் தோற்றம் பெற்றிருந்தது. மக்களினால் அதிசயமாக ஆவலுடன் அவதானிக்கப்பட்ட இத்தோற்றப்பாடு “நீர்த்தம்பம்” (Waterspout) என அழைக்கப்படும். நீர்த்தம்பங்கள் பொதுவாக இரண்டு வகையாகக் காணப்படும். ஒன்று, பொதுவான வானிலை நிகழ்வின் போது ஏற்படும் வானிலை நீர்த்தம்பங்கள் (weather waterspout). இரண்டாவது, சூறைப் புயலாகத் (Tornadoes) தோற்றம் பெறும் நீர்த்தம்பங்கள்.

**பொதுவான வானிலை நீர்த்தம்பங்கள்:** நீர்த்தம்பங்கள் வழக்கமாகவே கருமையான, தட்டையான தளமொன்றில் திரண் முகில்கள் விருத்தியடையும் கோடு நெடுகிலுமே உருவாகின்றன. இவ்வகை நீர்த்தம்பங்கள் பொதுவாக இடிமின்னல் புயல்களுடன் இணைந்திருக்க மாட்டாது. ஆனால் இவற்றுக்கு மாறாக சூறைப்புயல் நீர்த்தம்பங்கள் இடிமின்னல் புயலின் கீழ்ப்பக்கமாகவே விருத்தியடைகின்றன. வானிலை நீர்த்தம்பங்கள் நீரின் மேற்பரப்பில் விருத்தியடைவதுடன் மேல் நோக்கிய சுழலும் செயற்பாட்டினைக் கொண்டதாகக் காணப்படும். புனல் வடிவம் தோன்றும் போது வானிலை நீர்த்தம்பம் முதிர்ச்சி நிலையை அடையும். வேகமற்ற, மென்காற்று வீசும் சூழலில் தான் இவை உருவாகும். அதனால் மெதுவாகவே நகரும் தன்மை கொண்டவை.

**சூறைப்புயல்:** சுழல் தன்மை கொண்ட சூறைப் புயல் நீர்த்தம்பங்கள் நீருக்கு மேல் அல்லது நிலத்தில் இருந்து நீருக்கு நகரும் தன்மை கொண்டவை. நிலத்தில் உருவாகும் சூறைப் புயல்கள் போன்று அதே வகையான பண்புகளையே இவையும் கொண்டிருக்கும். அத்துடன் மிகக் கடுமையான இடிமின்னல் புயல்களுடன் இவை இணைந்திருக்கும். வேகமான காற்றுக்கள் கடல் கொந்தளிப்பு ஆலங்கட்டி மழை மற்றும் மோசமான மின்னல் தாக்கங்களையும் கொண்டிருக்கும்.

ஐக்கிய அமெரிக்காவில் நீர்த்தம்பங்கள் கரையோரத்தை நெருங்கிக் காணப்படும் போது தேசிய வானிலை சேவையினால் எச்சரிக்கை விடுக்கப்படும். ஏனெனில் இவற்றுட் சில தோற்றப்பாடுகளினால் மக்களுக்குக் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் ஏற்படலாம். வானிலை நீர்த்தம்பங்கள் நிலப் பகுதிகளுக்கு வந்த பின்னர் விரைவாக மறைந்து விடும். உள் நிலப் பகுதிகளை நோக்கி ஊடுருவிச் செல்வது குறைவாகவே கானப்படும். நீர்த்தம்பம் என்பது செறிவான சுழற்சி கொண்ட நிரல் அமைப்பிலான புனல் வடிவத்தைக் கொண்டு நீர்தொகுதிகளின் மேலாக இடம் பெறும் முகில்களாகும். இவை சில வேளைகளில் வெவ்வேறான திரண் வடிவ முகில்களுடன் தொடர்புபட்டுக் காணப்படும்.

பொதுவான அமைப்பைப் பொறுத்தவரை நீரின் மேலாக ஐந்து பகுதியாக அமைந்துள்ள வாழ்க்கை வட்டத்தைக் கொண்டதாக நீர்த்தம்பம் காணப்படும். அவை : (1) நீரின் மேற்பரப்பில் கருமையான புள்ளிப் பகுதி, (2) சுருள் பாங்கு, (3) சுற்றியுள்ள விசிறல் வளையம், (4) புலப்படும் ஒடுங்கல் தன்மை கொண்ட புனலின் விருத்தி, (5) இறுதியில் தேய்வடைந்து செல்லும் போக்கு ஆகிய பகுதிகளைக் கொண்டிருக்கும். நீர்த்தம்பம் என்னும் போது கடல் அல்லது ஏரிகளில் இருந்து பெறப்படும் நீரினால் நிரப்பட்டிருக்கும் ஒரு வானிலைத் தோற்றப்பாடு என நினைத்து விடக்கூடாது.

உண்மையில் நீர்நிலையின் மீது சுழலும் முகிலினால் நிரப்பப்பட்ட காற்றின் ஒரு நிரலாகவே அது அமைந்திருக்கும். பெரும்பாலான நீர்த்தம்பங்கள் அவை தோன்றும் பகுதியிலுள்ள கடல் நீரினை உறிஞ்சி இழுக்கமாட்டாது. அவை சிறியனவாகவும் நீரின் மேல் பலவீனமான சுழற்சி கொண்ட வளி நிரலாகவும் காணப்படும். இத்தோற்றப்பாடுகள் பெரும்பாலும் அயன மற்றும் உப அயனப் பகுதிகளிலேயே உருவாகின்றது. அத்துடன் ஐரோப்பா, மேற்கு ஆசியா (மத்திய கிழக்கு), அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஐம்பெரும் வாவிகள், அன்ராட்டிக்கா ஆகிய பகுதிகளில் தோன்றியிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குக் கரைகளிலும், கலிபோர்ணியாக் கரையோரங்களிலும் இவை தோற்றம் பெறுகின்றன.


பருத்தித்துறை
கடற்பரப்பில்
30-10-2022 காலை
9.30 மணியளவில்
தோன்றிய வானிலை
நீர்த்தம்பம்

நீர்த்தம்பங்களின் சூழலானது நுண் அளவுத்திட்டத்தில் இரண்டு கிலோ மீற்றருக்கும் குறைவான அகலத்தைக் கொண்டிருக்கும். இவற்றிலிருந்து விருத்தி பெறும் முகில்கள் நடுத்தர திரண் முகில்களாகக் காணப்படும். நீர்த்தம்பங்கள் சில வலிமையானதாகவும் சுழல் தன்மை கொண்ட இயல்பினையும் கொண்டிருக்கும். வளிமண்டலவியல் இயக்கத்தனமை பலவீனமாக இருக்கும் காலங்களிலேயே இவை உருவாக்கப்படும். ஈரநிலை கொண்ட சூழல்களில் வழமையாக விருத்தி செய்யப்படுகின்றன. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நீர்த்தம்பங்களின் உருவாக்கமும் இடம்பெறுகின்றன. 2012 இல் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மிக்சிக்கன் ஏரியில் ஒரே நேரத்தில் ஒன்பது ஒரே தன்மையான நீர்த்தம்பங்கள் இடம்பெற்றதாக அறியப்பட்டுள்ளது. 2021 மே இல் ஐந்து நீர்த்தம்பங்கள் ஒரே நேரத்தில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்சின் வட கரையோரமாக இடம்பெற்றது.

நீர்த்தம்பங்கள் சூறைப் புயலாகக் காணப்படும் போது அதனுடன் இணைந்தவாறு அதியுயர் இடிமின்னல் கலத்தின் சுழல் தன்மையானது மேலிழுப்புடன் இணைந்து காணப்படும். இவ்வாறான இணைவைக் கொண்டிராத தோற்றப்பாடுகள் சாதாரண வானிலை நீர்த்தம்பங்களாவே காணப்படும். இவை கரையோரம் சார்ந்த கடல் பகுதிகளில் மழை மூடமான இருள் நிலையில், தட்டையான அடிப்பகுதிகளில் மேற்காவுகை திரண் முகில் எழுச்சிகளை விருத்தி செய்வனவாகக் காணப்படும். இவ்வகையான நீர்த்தம்பங்கள் விரைவாக விருத்தி பெற்று மறைந்து விடுவதுடன் இருபது நிமிடங்களுக்கும் குறைவான வாழ்க்கை வட்டத்தையே கொண்டிருக்கும். இத்தகைய ஒரு தோற்றப்பாடே 2022 ஒக்டோபர் 30 இல் பருத்தித்துறைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் தோற்றம் பெற்றது.

நீர்த்தம்பங்கள் நீண்ட காலமாகவே மோசமான கடலோர இடர்களாக இனங்காணப்பட்டு வந்துள்ளன. இவற்றின் தோற்றம் வலிமையானதாக இருந்தால் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கும், மக்களுக்கும் அச்சுறுத்தலாக அமையும். கடலோர நீர்ப் பகுதிகளில் இவை தோன்றும் போது ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வானிலை சேவை நிறுவனத்தினால் விசேட எச்சரிக்கை விடுக்கப்படுவதுடன் மக்களைத் தூரத்தே விலகியிருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுவர். மோசமான சேதங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்துவது மிகக் குறைவாக இருந்தாலும் சில காலங்களில் மோசமான அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. 1955 இல் மோல்ராவில் ஏற்பட்ட போது ‘கிரான்ட்’ துறைமுகத்தில் பல படகுகள் அழிக்கப்பட்டு நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்தனர். 1851 இல் சிசிலியில் ஏற்பட்ட இரட்டைத் தோற்றப்பாட்டினால் கரையோரப் பகுதி பெரும் அழிவுக்குள்ளானது.

நீர் மேற்பரப்பில் இருந்து ஒரு மீற்றருக்குள் நீர்த்தம்பத்தின் காற்றுக்கள் வேகமாகச் சுழன்றடிக்கும் போது பல்வேறு அளவுகளிலுள்ள மீன்கள், தவளை கள், மற்றும் ஆமைகள் கூட மேல் நோக்கி வளிக்குள் உயர்த்தப்படும். சிலவேளைகளில் மீன் போன்ற சிறிய இனங்களை நீரிலிருந்து வெளியே உறிஞ்சி மேலே இழுத்து முகிலுக்குள் கொண்டு செல்லும். சுழன்று கொண்டிருக்கும் புனல் வடிவம் தனது சுழற்சியை நிறுத்தும் போது வளிமண்டலத்திற்கு கொண்டு செல்லப்பட்ட மீன்கள் முகில்களிலிருந்து கீழே வீசப்படும்.

உள்நாட்டில் மிகத் தூரத்திலுள்ள மக்கள் கூட மீன் மழையைச் சில காலங்களில் அவதானித்துள்ளனர். ஆறுகளிலிருந்தும் கூட மீன்கள் உறிஞ்சப்படுகின்றன. ஆனால் மீன் மழையென்பது ஒரு பொதுவான வானிலைத் தோற்றப்பாடு அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

சூறைப் புயலாக உருவாகும் நீர்த்தம்பங்கள் நிலப் பகுதியில் இடிமின்னலுடன் இணைந்து தோற்றம் பெறுவதுடன் அளவில் பெரிதாக இருப்பதுடன் பாரிய அழிவையும் ஏற்படுத்தக் கூடிய ஆற்றலையும் கொண்டவை. பருத்தித்துறைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் தோன்றியது சாதரண வானிலை நீர்த்தம்பமாகும்.

இவை திறந்த நீரின் மேலாக மாத்திரமே உருவாகும். நீர் மேற்பரப்பில் இவை விருத்தியாகி வளிமண்டலத்தின் கீழ்மட்டத்தில் சூடான நீர் வெப்பநிலைகள் மற்றும் உயர்வான ஈரப்பதன் ஆகியவற்றுடன் இணைந்து மேலே உயர்ந்து செல்லும். இவை வழமையாக சிறியவையாகவும், ஒடுக்கமான புனல் வடிவத்தையும் கொண்டிருப்பதுடன் அடிக்கடி நிகழக்கூடியதும் குறைவான அபாயத்தையும் கொண்டவை.

ஐக்கிய அமெரிக்காவின் வட மிக்சிக்கன் பகுதியில் ஆகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் அடிக்கடி ஏற்படுகின்றன. ஐம்பெரும் ஏரிகளின் நீரானது வருடத்தின் சில காலத்தில் வெப்பநிலை உயர்வடையும் போது இவை தோன்றுகின்றன. ஏரிகளுக்குக் குறுக்காக குளிர்காற்று நகர்ந்து செல்லும் போது, இக்குளிர் காற்றுக்கும் அதன் கீழாக காணப்படும் சூடான நீருக்கும் இடையிலான பாரிய வெப்பநிலை வேறுபாடுகளின் காரணமாக இவை உருவாகின்றன.

இவற்றின் நகர்வு 10 - 15 நொட்ஸ் வேகம் கொண்டவை. புனல் வடிவ சுழற்ச்சிக்குள் செல்லும் சூடான காற்றின் உட்பாய்ச்சல் பலவீனமடையும் போது புனல் வடிவச் சுழற்ச்சி மறையத்தொடங்கும். நீர் (கடல்) வெப்பநிலை சூடாகவும், வளி குளிராகவும், ஈரத்தன்மை கொண்டதாகவும், காற்றின் வேகம் சார்பளவில் குறைவாகவும் இருக்கும் போது நீர்த்தம்பங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய அம்சங்களைக் கொண்டதாகவே பருத்தித்துறைக் கடற்பரப்பில் 30-10-2022 காலை 9.30 மணியளவில் தோன்றிய வானிலை நீர்த்தம்பம் அமைந்திருந்தது. கடலில் இத்தோற்றப்பாடு இடம்பெறும்போது மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். அது நகரும்போது, அது வரும் பாதையில் இருந்து விலகி பாதுகாப்பான ஒதுக்கிடங்களை நோக்கி மக்கள் செல்ல வேண்டும்.

வட அமெரிக்காவின் மத்திய அகலக்கோடுகளில் காணப்படும் பிரதேசங்களில் மிகக் கடுமையான வேகத்தில் சுழலும் சூறைப்புயல்கள் உருவாகின்றன. அடர்த்தியான திரண்மழை முகில்களின் தளத்தில் இருந்து தொங்குகின்ற புனல் போன்ற கருமையான முகிலின் தோற்றத்தைக் கொண்டிருக்கும். இதன் கீழ் அந்தந்தில் காணப்படும் புனல் 100 - 450 மீற்றர் விட்டத்தைக் கொண்டிருக்கும்.

இச் சூறைப் புயல்களின் வேகம் மணிக்கு 400 கிலோ மீற்றர்களுக்கு மேலாகக் காணப்படும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் மேலாகச் செல்லும் புனல் முறுகித் திருகுதலுக்கு உட்படுகின்றது. தரையைத் தொடும் போது அதன் பாதையில் காணப்படும் எல்லாவற்றையும் முற்றாக அழித்துவிடும். கடலோர முனைவு வளிக் குளிர்ப் பிரிதளம் சூடான, ஈரத்தன்மையான அயனக் காற்றினை உயர்த்தும் போது சூறைப் புயலுக்கான சாதகமான நிலைமைகள் தோற்றிவிக்கப்படும்.

அதிகளவான சூறைப் புயல்கள் ஐக்கிய அமெரிக்காவின் மத்திய பகுதிகளில் தோன்றுகின்றன. இப்பகுதி கனடாவிலுள்ள பிறேயறி மாகாணங்கள், ஒன்ராறியோ வரையும் விரிவடைந்து காணப்படும். இருப்பினும் கனடாவில் இப்புயல்களின் செயற்பாடு மிகக் குறைவாகவே இருக்கின்றது. மலைத் தொடர்கள் மற்றும் காட்டுப் பகுதிகளின் மேலாக இப்புயல்கள் தோன்றுவது அரிது. இப்புயல்களின் உருவாக்கத்தினை முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடிய எச்சரிக்கை முறைகள் நன்கு விருத்தி பெற்றுள்ளதனால் அவை தாக்கப் போகும் பகுதிகளுக்கு முன் கூட்டியே எச்சரிக்கை விடுப்பது மேற்கு நாடுகளில் இலகுவாக மாறியுள்ளது.

# வரலாற்றில் வங்கம் தராத பாடம்:

## நாடற்றவர்களான சக்மா இன மக்களும் பங்களாதேசில் தொடரும் இன-மத வன்முறையும்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழும் மிகப்பெரிய இனமான 'சக்மா' மக்கள் தென்கிழக்கு பங்காள தேசத்தின் சிட்டகாங் மலைத்தொடர் பகுதிகளை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

அத்துடன் திரிபுரா, மிசோரம், அசாம், அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் சக்மா பழங்குடியினரும் வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் பௌத்தர்கள்.

சக்மா, மர்மா, டிப்பராஸ், சக், முருங், குமி, லுஷாய், போம், பான்கோ மற்றும் மோக் உட்பட குறைந்தது 10 இன சிறுபான்மையினர் இந்த சிட்டகாங் மலைத்தொடர்களில் வாழ்கின்றனர்.

5,138 சதுர மைல் பரப்பளவில் பரவியுள்ள இப்பகுதி வடக்கே திரிபுரா, தெற்கில் மியான்மரின் அரக்கான் மலைகள், மிசோரமின் லுஷாய் மலைகள் மற்றும் கிழக்கில் மியான்மரின் அரக்கான் மலைகள் மற்றும் மேற்கில் சிட்டகாங் மாவட்டத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

### சக்மா மக்கள் பெரும்பான்மையான

பங்காளதேசத்தின் சிட்டகாங் மலைப் பகுதிகளிலும் மற்றும் மியான்மர் நாட்டின் மலைப்பகுதிகளிலும், கிழக்கு இந்தியாவின் அசாம், திரிபுரா, மிசோரம், அருணாச்சலப் பிரதேசம் மாநிலங்களிலும் வாழும் பழங்குடி மக்களே இவர்கள் ஆவார்.

1971 பங்காளதேச விடுதலைப் போரின் போது ஆயிரக்கணக்கான சக்மா பழங்குடி மக்கள் சிட்டகாங் பகுதிகளிலிருந்து இந்தியாவின் திரிபுரா, மிசோரம் மாநிலங்களில் அகதிகளாக குடியேறினர்.

இம்மக்கள் தேரவாத பௌத்த சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இம்மக்கள் சக்மா மொழி, வங்காள மொழி மற்றும் இந்தி மொழிகளை பேசுகின்றனர். சக்மா பழங்குடி மக்கள் 31 குடிகளாக பிரிந்துள்ளனர்.

சிட்டகாங் மலைத்தொடரில் வாழும் சக்மா பழங்குடி மக்களுக்கும், பங்காளதேச இஸ்லாமியர்களுக்கும் 1977-ஆம் ஆண்டில் பிணக்குகள் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட வன்முறையில் பல நூற்றுக்கணக்கான சக்மா மக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் இரு பிரிவினருக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது.

கடந்த ஏழு தசாப்தங்களாக, பழங்குடியின மக்களை சக்மாஸ் உட்பட - அவர்கள் பாதுகாப்புப் படைகள், அரசியல் பிரிவுகள் மற்றும் நில அபகரிப்பாளர்களிடமிருந்து அடக்கு முறையை எதிர்கொள்வதாக குற்றம் சாட்டுகின்றனர்.

சக்மா மக்கள் இந்தியாவுக்கு விசுவாசமாக இருப்பதாகவும், கிழக்கு பாகிஸ்தான் உருவான நேரத்தில் இந்தியாவுடன் இணைய விரும்பியதாகவும் அறியப்படுகிறது.

### ஆகஸ்ட் 17 - கருப்பு தினம்:

சக்மா மக்கள் ஆகஸ்ட் 17 ஐ 'கருப்பு தினமாக' அனுசரித்து வருகின்றனர்.

அன்றைய தினம் தான் சக்மா பிராந்தியம் அப்போதைய கிழக்கு பாகிஸ்தானுக்கு, இப்போதய வங்காளதேசத்திற்கு வழங்கப்பட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்ற இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் இப்பகுதியை பாகிஸ்தானின் ஒரு பகுதியாக சேர்க்கும் முடிவு அறிவிக்கப்பட்டது.




தேசிய மற்றும் சர்வதேச அளவில் சக்மாக்களின் பிரச்சனைகளை தீர்க்க 2014 ஆம் ஆண்டு சக்மா தேசிய சபை நிறுவப்பட்டது. 2016 இல் கவுகாத்தியில் நடைபெற்ற முதல் மாநாட்டில், சக்மா மக்கள் ஆகஸ்ட் 17 ஐ 'கருப்பு தினமாக' அனுசரிக்க முடிவு செய்திருந்தனர்.

1947இல் முஸ்லிம்கள் பெரும்பான்மையான பகுதிகள் பாகிஸ்தானிலும், முஸ்லீம்கள் அல்லாத பெரும்பான்மையான பகுதி இந்தியாவிற்கும் என இருநாட்டுக்கும் சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் காலனி அரசு இறுதியாக ஏற்றுக்கொண்டது.

சக்மா மக்கள் பெரும்பான்மையாகக் கருதப்பட்ட 98.5 வீத இன மலைப் பழங்குடியினரை உள்ளடக்கிய, முஸ்லீம் அல்லாத மக்கள்தொகை கொண்ட பகுதியாக இருந்ததால், அப்போது பிரிக்கப்படாத இந்தியாவின் சிட்டகாங் மலைப் பகுதி இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும்.

கிழக்கு பாகிஸ்தானுடன் இணைத்த அநியாயமான முடிவுக்கு எதிராக சிட்டகாங் மலைப் பகுதி மக்களும் அதன் தலைவர்களும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அதன் தலைவர்கள் இப்பகுதியை இந்தியாவிற்கு மீண்டும் கொண்டு வர அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டாலும், இந்தியத் தலைவர்கள் அவ்வேளையில் முனைப்புடன் செயல்படவில்லை.

எனவே, சக்மா தேசிய சபையின் முயற்சிகளும் முன்முயற்சியும், சக்மாஸ் பிரிவினையின் மோசமான பலிகடாக்களில் ஒருவராக இருந்துள்ளார்கள். இது அவர்களை நாடற்றவர்களாகவும், உலகிலேயே மிகவும் பாகுபாடு மற்றும் துன்புறுத்தப்பட்ட இனங்களில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளது.

சக்மா தலைவர்கள் இந்தியாவுடன் இணைக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர், அதற்காக தலைவர்கள் லெப்டினன்ட் சினேகா குமார் சக்மா மற்றும் லெப்டினன்ட் காமினி மோகன் திவான் ஆகியோர் ஜவஹர்லால் நேரு மற்றும் சர்தார் வல்லபாய் படேல் போன்ற தேசிய தலைவர்களை சந்திக்க புது தில்லிக்கு பல பயணங்களை மேற்கொண்டனர்.

### எல்லை பிரச்சனை:

பங்களாதேசம், இந்தியாவும் 4096 கி.மீ தங்கள் எல்லையை பகிர்ந்து




கொண்டுள்ளன. இவ்வெல்லையானது மொத்தம் ஐந்து மாநிலங்கள், மேற்கு வங்காளம், அசாம், மேகாலயா, திரிபுரா, மற்றும் மிசோரமை கடந்து செல்கிறது.

இந்திய பங்களாதேஷ் உறவுகளில் உள்ள முக்கிய பிரச்சனையாக, பெரும்பாலும் இந்திய மாநிலமான திரிபுராவில் தஞ்சம் புகுந்துள்ள சக்மா அகதிகளின் பிரச்சனையே உள்ளது.

1994 இல் நடந்த பேச்சுவார்த்தைகள் திரிபுராவில் இருந்து பங்களாதேசத்தில் உள்ள சிட்டகாங் மலைப் பகுதிகளுக்கு சக்மா அகதிகளை திருப்பி அனுப்ப வழிவகுத்தது. அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். சிலர் இன்னும் நாடு திரும்புவதற்காக காத்திருக்கிறார்கள்.

குடியேறியவர்களின் மற்றொரு சிக்கலை இந்தியா எதிர் கொள்கிறது, அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் குடியேறிய பலவீனமான பிரிவைச் சேர்ந்தவர்கள்.

10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் என மதிப்பிடப்பட்ட அவர்களின் எண்ணிக்கை இந்தியப் பொருளாதாரத்துக்குச் சுமையாக இருக்கிறது என்பதும் உண்மையே. இந்தியா பலமுறை கோரிக்கை விடுத்தும், வங்காளதேச அரசு அவர்களை திரும்ப அழைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகஸ்ட் 1947 இல் பிரிட்டிஷ் இந்தியா மத அடிப்படையில் இரண்டு சுதந்திர நாடுகளாக பிரிக்கப்பட்டது - இந்திய யூனியன் மற்றும் பாகிஸ்தான். முஸ்லீம் மக்கள் வசிக்கும் வடமேற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகள் பாகிஸ்தானுக்கு சென்றன. கிழக்கே வங்காளத்தை உருவாக்கியது (1955 முதல் - கிழக்கு பாகிஸ்தான்).

அங்கே ஒரு சமமற்ற பொருளாதார மற்றும் அரசியல் நிலையை ஆக்கிரமித்துள்ளது (முழு நாட்டின் மக்கள் தொகையில் 1:2 க்கும் மேற்பட்டோர் அதில் வாழ்ந்தாலும்). கிழக்கு பாகிஸ்தானில் யாரும் பேசாத நாட்டின் ஒரே உத்தியோகபூர்வ மொழியான உருதுவை உருவாக்க மத்திய அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியால் பெங்காலி தேசியவாதத்தின் எழுச்சி தூண்டப்பட்டது.

1966 ஆம் ஆண்டில், அதன் தலைவர் ஒரு முக்கிய அரசியல் பிரமுகர், மாகாணத்தின் பரந்த உரிமைகளின் ஆதரவாளர், ஷேக் முஜிபுர் ரஹ்மானின். அவாமி லீக் வெற்றி பெற்றார். டிசம்பர் 1970 பொதுத் தேர்தல்களுக் குப் பிறகு நிலைமை கடுமையாக அதிகரித்தது.

பாகிஸ்தான் துருப்புக்களுக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் மோதல்கள் தீவிரமாக இருந்தன. அகதிகள் கூட்டம் இந்தியாவுக்கு விரைந்தது. பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளின் அடக்கு முறைக்கு பதிலளிக்கும் விதமாக, மார்ச் 26, 1971 அன்று, இந்திய உதவியுடன் பங்களாதேஷ் என்ற புதிய நாட்டின் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.

இது டிசம்பர் 16, 1972 அன்று நடைமுறைக்கு வந்தது. முஜிபுர் ரஹ்மான் நாட்டின் அர சாங்கத்திற்கு தலைமை தாங்கி னார். இதுவே வங்கம் தந்த பாடமாக நாம் அறிகிறோம். ஆனால் வரலாற்று ரீதியில் வங்கம் தராத பாடமாக பல விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. சக்மாக்களுக்கு எதிரான அடக்குமுறை கடந்த ஏழு தசாப்தங்களாக தொடர்கிறது.

பழங்குடியின சக்மா மக்கள் பங்களாதேச பாதுகாப்புப் படைகளாலும், அரசியல் சக்திகள் மற்றும் நில அபகரிப்பாளர்களிடமிருந்து இன்னமும் அடக்கு முறையை எதிர்கொள்கின்றனர்.



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29. 
இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

24. 2
25. 3
26. 1
27. 2
28. 2
29. 2
30. 3
31. 1
32. 1
33. 1
34. 2
35. 1

கல்வி tv CHANNEL-1

**20.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**20.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எதிர்க்கட்சித் தலைவர் நன்றியில்லாத ஒருவர்

## டயனா கமகே விசனம்

கொழும்பு, நவ. 20

சவரக்கத்தியால் வாகை மரங்களை வெட்ட எதிர் பார்க்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுப்பதாக சுற்று லாத்துறை ராஜாங்க அமைச்சர்டயனா கமகே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நான் அறிந்தவரை எதிர்க்கட்சித் தலைவர் நன்றியில்லாதவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

என்னை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து துரத்துவதற்கு அவர் பெரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது.

கைவிடப்பட்டு அநாதரவாக இருந்த நேரத்தில் நானே அவருக்கு கட்சியை வழங்கினேன்.

அவருக்கு அதற்கான நன்றி இருக்கவேண்டும். நான் அறிந்தவரை அவர் நன்றியில்லாதவர். நாம் மோதிப் பார்ப்போம். பெண்களை பயன்படுத்தி என்னை விமர்சிக்கின்றனர்.

பெண்களுக்காக குரல் கொடுப்பதாக கூறும் பெண்கள் என்னை விமர்சித்து வருகின்றனர். நான் பெண் இல்லையா? என்னை பெண்ணாக தெரிய வில்லையா? நான் பெண்களுக்காக குரல் கொடுப் பவள்.

இன மத பேதமின்றி அனைத்து பெண்களுக்காக குரல் கொடுப்பவள். இதனால், வெட்கமில்லாமல் செயற்பட வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவரே.



அதேவேளை, அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கொள்ளைகளைத் திருத்தினால், நாட்டை முன்னேற்ற முடியும். தாமரைக் கோபுரத்துக்கு நான் நேற்று பில்லி யன் கணக்கான முதலீட்டை கொண்டு வந்தேன்.

அடுத்த ஆண்டளவில் தாமரைக் கோபுரத்தின் கடனை முற்றாக அடைத்து விடலாம்.

மேலும் கஞ்சா தாய்லாந்து போன்ற பௌத்த நாட்டில் சட்டரீதியானது என்றால், அப்படியான ஒன்றை இலங்கையில் சட்டமாக்க முடியாது?. கஞ்சா ஏற்றுமதியின் பெறுமதியை விளக்கி சபையில் உரையாற்றிய ராஜித சேனாரத்னவுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கஞ்சா பற்றி தவறாக பேசுவது பற்றி வருத்தப்படு கிறேன் - என்றார்.

(அ)

# சோமாலியா நிலை இலங்கைக்கும் வரும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கூறுகிறது

யாழ்ப்பாணம், நவ. 20

சோமாலியா எதியோப்பியா போன்ற நாடுகளில் விவசாயம் மீன்பிடித்துறையை கொண்டிருந்த போதும் அந்த நாட்டினுடைய வளங்கள் துஸ்பிரயோகம் செய் யப்பட்டதால் மக்கள் இன்று பஞ்சம் பசி பட்டினி யால் செத்து மடிகின்றனர். இதே போன்ற நிலை 25 வருடத்திலோ 50 வருடத்திலோ இங்குள்ள மக்களும் எதிர்கொள்ளும் நிலையே காணப்படுகின்றது என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் இன்பம் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிவடக்கில் பூர்வீமாக இருந்த மயிலிட்டி துறை முகம் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களிடம் இருந்து பறிக்கப்படுகின்றது. அப்பகுதி மக்கள் தொழில் செய்வதில் பல்வேறு பிரச்னைகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

இந்நிலையில் எதிர்காலத்தில் பருத்தித்துறை துறை முகத்தை ஆசியா அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியு டன் அபிவிருத்தி செய்ய முன்னெடுப்புகள் இடம் பெறுகின்றன. பருத்தித்துறை துறைமுகமானது சர்வ தேசத் தரம் வாய்ந்த ஒன்றாக அபிவிருத்தி செய்யப் படும் சூழலில் அதனை பயன்படுத்தக்கூடிய ஆளுமை யும் ஆற்றலும் எங்களுடைய கடற்றொழில் மக்களி டம் இல்லை. இதனால் அந்தப் பிரதேசத்தில் அப்பகுதி மீனவர்களுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போகும் நிலை இருக்கின்றது.

ஆழ்கடல் மீன்பிடியை முடக்குவதை இலக்காக கொண்டு சில நிறுவனங்கள் பொய்யான தகவல்களை பரப்பிக் கொண்டிருக்கின்றது. பத்து வருடங்களுக்கு பின்னர் கடலில் மீன் பிடிக்க முடியாது என்று பண்ணை வளர்ப்பை ஊக்குவிக்கின்ற பொய்யான பிரசாரத்தை செய்து வருகின்றனர். இந்த நிலைப்பாட்டை பார்க்கும்போது கரையோர பிரதேச மீனவ மக்களு டைய எதிர்காலம் பாரிய படுகுழியில் தள்ளப்படக் கூடிய அபாயம் இருக்கின்றது.

எத்தனை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பலரும் மீன்பிடித் தொழில் செய்து வரும் நிலையில் இன்னும் ஒரு பத்து வருடத்தில் கடலில் மீன் பிடிக்க முடியாது என்கிற பொய்யான கருத்து பரப்பப்படுகிறது. பண்ணை வளர்ப்பு மீன் பிடிமுறையால் எதிர்காலத் தில் பாரிய வாழ்வாதாரப் பாதிப்புகள் ஏற்படுத்தப்படு வதுடன் பொருளாதார நெருக்கடியையும் எதிர் நோக்கப் போகின்றோம்.

சோமாலியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் விவசாயம் மீன்பிடித்துறையை கொண்டிருந்த போதும் அந்த நாட்டினுடைய வளங்கள் துஷ்பிரயோகம் செய் யப்பட்டதால் மக்கள் இன்று பஞ்சம் பசி பட்டினி யால் செத்து மடிகின்றனர். இதே போன்ற நிலை 25 வருடத்திலோ 50 வருடத்திலோ இங்குள்ள மக்களும் எதிர்கொள்ளும் நிலையே காணப்படுகின்றது.

ஆகவே இந்த விடயம் தொடர்பாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் தெளிவாக செயற்படுகின்றது. நாட்டினுடைய வளத்தை மக்களுடைய எதிர்காலத் தையும் பாதுகாப்பையும் கருத்துக் கொண்டு எங்கள் அரசியல் தலைவர்களோ அரசியல் கட்சிகளோ ஆக்க பூர்வமான எதிர்காலச் செயற்பாடுகள் ஒன்றையும் செய்யவில்லை. தமிழ் மக்கள் உரிமைக்காக போராடு கின்ற விடயங்களுக்கு அப்பால் நாட்டினுடைய வளங் களை பல்தேசிய கம்பனிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தோடு தொடர்ந்து பயணிக்க வேண்டிய கட்டாயத்துக்கு நாங்கள் தள்ளப் பட்டு இருக்கின்றோம் - என்றார்.

(அ)

# ராஜித சேனாரத்னவுக்கு சஜித் அணி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 20

ராஜித சேனாரத்ன ஆளுங்கட்சி பக்கம் சென்றால், அத்துடன் அவரின் அரசியல் வாழ்வும் முடிந்து விடும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜின சேனாரத்ன, ஜனாதி பதிக்கு ஆதரவு வழங்கும் வகையில் ஆளுங்கட்சி பக்கம் தாவவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேராவிடம் வினவப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ராஜிதவிடம் நானும் வின வினேன் ,அவர் இல்லை என சொன்னார். இருந்தாலும் போய்விடுவாரோ என்ற சந்தேகம் எனக்கு உள்ளது. அவ்வாறு சென்றால் அத்துடன் அவரின் அரசியல் வாழ்வு முடிந்துவிடும். - என்றார்.

(அ)

# ராஜீவ்காந்தி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

28 ஆண்டு காலமாக இழுத்தடித்த எம்டிஎம்ஏ விசாரணை முடிவுறும் தறுவாயில், இதை முடக்கி, சிபிஐ-யின் ஒரு பிரிவுக்கு இதை மாற்ற மத்திய அரசு முடிவுசெய்ய என்ன காரணம்? 1991 பொதுத் தேர்தல்களில் வென்று அடுத்த பாரதப் பிரதமராகியிருக்கவேண்டிய ஒருவரின் கொலையில் எல்ரிரிஈ-க்கு உதவிய இந்திய மற்றும் வெளிநாட்டு சக்திகளை வெளிக்கொண்டுவருவதில் இந்திய அரசு உண்மையிலேயே முனைப்பு காட்டுகிறதா? இந்தச் சதித்திட்டத்தில் தொடர்புடையதாகச் சில சுவாரஸ்யமான மற்றும் செல்வாக்குமிக்க பெயர்களும் நாடுகளும் பேசப்பட்டிருந்தன. ஆனால், எந்த வலுவான ஆதாரமுமின்றி, வெறும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அந்தப் பெயர்களை இங்கு நான் குறிப்பிடுவது நியாயமாகாது என்பதால் நான் அதைச் செய்யவில்லை. அந்த ஆதாரத்தை எம்டிஎம்ஏ வெளிச்சத்துக்குக் கொண்டுவரத் தவறியது துரதிர்ஷ்டவசமானது என்றாலும், புரிந்துகொள்ளக்கூடியதும் கூட. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப்பத்திரிகையைத் தயார் செய்த விசாரணை அதிகாரியான முன்னாள் சி பி ஐ அதிகாரி ரகோத்தமனின் பேட்டியை யூரியூபில் நீங்கள் பார்த்தாக வேண்டும். இந்தப் பேட்டி அவர் ஓய்வுபெற்ற நீண்ட காலத்துக்குப் பிறகு கொடுக்கப்பட்டது. அவர் சிறப்புப் புலனாய்வுக் குழுவில் தீவிரமாக உழைத்த காலத்திற்கும் ஓய்வுக்குப் பிறகு யூரியூப் கமெராவுக்கு முன் அமர்ந்து பேட்டி கொடுக்கும் காலத்திற்கும் இடையில் இவரில் என்ன மாற்றம் நேர்ந்துவிட்டது என்று நான் வியக்கிறேன். அந்தப் பேட்டியில் அவர், பிரபாகரனைத் ‘தண்டிக்கப்பட்ட குற்றவாளி’ என்று கூறமுடியாது ஏனென்றால், அவர் அப்படியில்லை என்று வெளிப்படையாகப் பேசுகிறார். மேலும், ஈழத்துக்காகத் தன் உயிரைத் தியாகம்செய்த ஒரு மாவீரர் அவரென்றும் புலிகள் தலைவரை இவர் போற்றியுள்ளார். சுவாரஸ்யமாக இருக்கிறதல்லவா? இதைப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம். பொட்டு அம்மானின் துணையுடன் பிரபாகரன்தான் ராஜீவ் காந்தி கொலைக்கு உத்தரவிட்டார் என்ற வலுவான ஐயம் பலர் மனதிலும் இருந்தாலும், இரத்தத்தில் ஊறிய திரையின் மறைவில் செயலாற்றிய வேறுபல சக்திகளுக்கும் இதில் பங்குண்டு. இது குறித்து எவ்வளவு வேண்டுமானாலும் பேசப்படலாம், எழுதப்படலாம், படிக்கப்படலாம், யூகிக்கப்படலாம், ஆனால், வலுவான உண்மையாக எதுவும் எக்காலத்துக்கும் வெளியாகாது. கென்னடி கொலைபோன்ற முக்கிய புள்ளிகளின் கொலை வழக்குகள் போலத்தான் இதுவும்.

இப்போதைக்கு, நமது ஞாயிறு காலை உணவு நமக்காகக் காத்திருக்கிறது.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

## வவுனியாவில்...

பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

வவுனியா நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உணவுப் பாதுகாப்புக்கான அரசாங்கத்தின் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உணவு பாதுகாப்பு வேலைத் திட்டத்திற்காக நான்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் பசும்பால் கைத்தொழில் இந்திய உதவியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடவும் நீங்கள் இச்சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

இம்மாவட்டங்களில் நிலவும் கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் தெரியவந்துள்ளன. அவற்றுக்கான தீர்வுகளை விரைவில் வழங்க எதிர்பார்க்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்ற திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை உருவாக்க முடியும். ஏற்றுமதி பொருளாதாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதிக டொலர்களை உழைக்கும் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

அதற்கான வேலைத்திட்டத்தை நான் 2023 வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளேன். அதற்கமைய வடக்கில் செய்ய வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்ல, வன்னிக்கும் இதில் பொறுப்பு உண்டு என்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன். -என்றார்.

வவுனியா மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் பிரதேச செயலாளர்களிடம் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

## வவுனியாவில்...

உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டார்.

இதனை அடுத்து ஜனாதிபதியின் இணைப்புச் செயலக திறப்பு விழாவில் செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ சுமந்திரன் ஆகியோருடன் வடக்கு அவைத் தலைவர் சி. வி. கே சிவஞானமும் கலந்து கொண்டிருந்தார். (அ)

## ஜனாதிபதியின்...

ரின் உறவினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஒன்று கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

ஜனாதிபதி மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்ததையடுத்து அங்கு கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கேட்டு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அவர்களது போராட்டத்தை தடுக்கும் வகையில் வவுனியா பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், குலசிங்கம் திலீபன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## வடக்கு காணி,...

இதன்படி வடக்கு மற்றும் தெற்கில் நிலவும் காணிப்பிரச்னைகள் அனைத்தும் தீர்க்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்னைக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்த மாவட் டங்களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக வடக்கு மாகாணத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கில் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்னைகள் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேவை யான தீர்வுகளை வழங்குவதற்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட் டார்.

செட்டிகுளம் பகுதியில் 1994 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படாமைக் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இங்கு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

செட்டிகுளம் பிரதேசத்தின் காணிப் பிரச்னை தொடர்பில் மத்தியஸ்தம் செய்து 03 மாதங்களுக்குள் தீர்வு காணுமாறு வவுனியா மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் நீதியமைச்சு மற்றும் காணி அமைச்சிடம் விசாரணை செய்வதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மக்களின் வீட்டுப் பிரச்னை தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், வடக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளதாகவும், அதற்கு மேலும் சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், நாடளாவிய ரீதியில் தற்போது பல வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்னைக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (அ)

## சகலரும்...

75ஆவது சுதந்திர தின விழாவின்போதாவது இந்நாட்டின் அனைத்து மக்களும் ஒரு தாயின் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டுமெனத்தான் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் செயற்படும், வடமாகாண அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலுவலகத்தை நேற்று வவுனியாவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

நீண்ட காலமாக வடக்கு மற்றும் தென்னிலங்கை மக்கள் பல்வேறு காரணங்களால் சிரமப்படுவதாகவும், அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க தாம் துரிதமாக செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தின் அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் மூலம் 120 பேருக்கு வீட்டு உறுதிப்பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அடையாளமாக 30 பேருக்கு வீட்டு உறுதிப்பத்திரங்களும் வடக்கில் யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் 96 பேரில் அடையாளமாக 12 பேருக்கு நிதியுதவியும் நேற்று ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன.

மேலும் வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கான உர விநியோகத்தை அடையாளப்படுத்தும் வகையிலும் நேற்று சில விவசாயிகளுக்கு உரம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி மேலும் கூறுகையில்-

இந்த அலுவலகத்தில் இருந்தபடி வடக்கு மக்களின் பிரச்னைகள் குறித்து கலந்துரையாட முடியும். யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே அனைத்தும் வழங்கப்படுவதாக அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். தற்போது வவுனியாவிலும் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவார். அமைச்சுக்களிலுள்ள அதிகாரிகளும் இந்த அலுவலகத்திற்கு நேரில் வந்து வடக்கு மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு முற்படுவார்கள் என நான் நம்புகின்றேன். அனைத்து மக்களின் பிரச்னைகளுக்கும் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத்தால் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கும் வடக்கு மக்களுக்குள்ள பிரச்னைகளுக்கும் நாம் தீர்வுகளை வழங்க வேண்டும். அதே போன்றே, இலங்கை சமூகத்தில் தமக்குள்ள உரிமைகள் தொடர்பில் முஸ்லிம்களுக்கும் பிரச்னைகள் உள்ளன. மலையக மக்களுக்கும் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. இப்பிரச்னைகள் அனைத்தும் தீர்க்கப்படவேண்டும் என்ற சமூக கருத்து நிலவுகிறது.

எனவே இந்த பிரச்னைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே சிறந்த சந்தர்ப்பம். -என்றார். (அ)

## சு.கவை...

பெற்றுக்கொண்டுள்ளவர்களுடன் இணைந்து அவர் இந்த நடவடிக் கையை ஆரம்பித்துள்ளார்.

இது சம்பந்தமான முதலாவது கூட்டம் அமைச்சர் மகிந்த அமரவீரவின் வீட்டில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, சாந்த பண்டார ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

இறுதியில் முன்னாள் ஜனாதிப தியை சந்திப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த யோசனையை துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண ஆகியோரே முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை காலையில் அமைச்சர் மகிந்த அமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

மாலை வாருங்கள் சந்திக்கலாம் என முன்னாள் ஜனாதிபதி பதிலளித்துள்ளார். இதனையடுத்து இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை தவிர ஏனையோர் முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பில் உள்ள வீட்டுக்குச் சென்று அவரை சந்தித்துள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, “ எனக்கு மைத்திரிபால, தயாசிறி ஆகியோரை பிடிக்கவே பிடிக்கவில்லை. மைத்திரிபாலவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வர நான் உதவியதே நான் எனது அரசியல் வாழ்வில் செய்த மிகப் பெரிய தவறு.

அவர் கட்சியைச் சர்வாதிகாரத்தை நோக்கிக் கொண்டு சென்றார். சஜித் பிரேமதாஸவுக்கு முட்டுக்கொடுக்கப் பார்க்கின்றார். நான் கட்சியின் யாப்பை மாற்ற முயற்சிக்கவில்லை. தலைவர் பதவிக்கு வேறு யாராவது வந்து விடுவார்கள் என்ற பயம் கொண்டவர்களே கட்சியின் யாப்பை மாற்றுவார்கள்” எனக் கூறியுள்ளார்.

அப்போது, “நீங்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவீர்களா?” என பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள் ளனர். இதற்கு பதிலளித்துள்ள முன் னாள் ஜனாதிபதி, “நான் தேர்தலில் போட்டியிடமாட்டேன். ஆலோசகர் என்ற வகையில் கட்சியை காப்பாற்ற தலையிடுவேன்” எனக் கூறியுள்ளார்.

## பயங்கரவாத...

மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோரிடம் இருந்து, குறித்த கைதிகள் தொடர்பான அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தற்போது விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 15 பேரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேகநபர்கள் 76 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

அவர்கள் தொடர்பில் விரைவில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (அ)

## தேர்தலை...

ஜீ.எல்.பீரிஸ் நேற்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தற்போது அதிகமாக இருப்பதாக ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் தற்போதைய பிரத மர் கடந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தபோது அந்தப் பதவிகளை அதி கரிக்க நடவடிக்கை எடுத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்றும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

## காகம்...

பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர் வந்து என்ன செய்ய போகிறார் என்பதை நாங்கள் பார்ப்போம். ஜனாதிபதியை கட்டிப்போட்டு விட்டு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது பணத்தை கொள்ளையிட வேண்டும் என்பதே நாட்டின் அரசியல்வாதிகளில் பலரது எண்ணமாக இருக்கின்றது-என்றார்.

நிரோஷன பெரேராவின் கருத்துக்கு பதிலளித்து உரையாற்றிய ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க,ஒருவரை காகம் என கூறுவது மோசமான கீழ்த்தரமான செயல். காகம் என பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு காலத்தில் காகத்துக்கு பின்னால் சென்றவர்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ். உணவகங்களில் நேற்று திடீர் சோதனை



யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாநகரில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடத்திய பரிசோதனை நடவடிக்கையில் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உணவகங்களில் திடீர்ப் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குளிர்சாதனப் பெட்டியில் சீர்கேடாகவும் தீங்கு விளைவிக்கும் வகையிலும் வைக்கப்பட்டிருந்த மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

மேலும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான நிற ஊட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களும் அழிக்கப்பட்டன.

அத்துடன் இரண்டு வாரங்களுக்கு அனைத்தும் சீர் செய்யப்படாவிடின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உணவக உரிமையாளர்களுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (அ)

# வவுனியாவில் 2100ஆவது நாளாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்

வவுனியா, நவ. 20

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் 2100 ஆவது நாளை எட்டிய நிலையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக தாய்மார்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் வெளிநாடுகளின் தலையீடு அவசியம் , அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வந்து உதவி செய்து நேரடியாக இப்பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டும் , வெளிநாட்டின் தலையீட்டையே நம்பி



போராடி வருகின்றோம் என போராட்டத்தில் கலந்துகொண்ட உறவுகள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கக் கொடி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை அகதிகள் இரண்டு பேர் வியட்நாமில் தற்கொலை முயற்சி

கொழும்பு, நவ. 20

வியட்நாமில் அகதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளில் இருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு தற்கொலை முயற்சியை மேற்கொண்டதாக குறித்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், மற்றுமொருவரின் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த 306 இலங்கையர்கள் உரிய விஸா நடைமுறைகளின் பிரகாரம் மியன்மார் சென்று அங்கிருந்து கப்பல் ஒன்றின் மூலம் சட்டவிரோதமான முறையில் அகதிகளாக கனடா நோக்கிச் செல்ல முயற்சித்திருந்தனர்.

இதேவேளை, தங்களை இலங்கைக்கு மீள அனுப்பும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற நிலையில் தாம் அங்கு செல்லத் தயார் இல்லை என தெரிவித்தே தற்கொலை முயற்சியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய அரபு இராச்சிய நாடுகளுக்கு சுற்றுலா விஸா மூலம் செல்ல தடை!

கொழும்பு, நவ. 20

ஓமான், டுபாய் மற்றும் அபுதாபி உள்ளிட்ட ஐக்கிய அரவு இராஜ்ஜிய நாடுகளுக்கு சுற்றுலா விஸா மூலம் தொழில் வாய்ப்புக்களுக்கு செல்வதை தடைவிதிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, பாராளுமன்றத்தில் நேற்று இதனைக் குறிப்பிட்டார்.

சுற்றுலா விஸா மூலம், இலங்கையிலிருந்து ஓமானுக்கு வேலைவாய்ப்புக்களுக்காக அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள், அங்கு விபசாரம் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்றமை தொடர்பில் வெளியான தகவலை அடுத்தே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.(அ)




# கஞ்சா இலங்கையின் கலாசாரம்!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பல யோசனைகள் சிறந்த யோசனைகள் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கஞ்சா இலங்கையின் கலாசாரம். வெள்ளையர்கள் புகையிலை அறிமுகம் செய்து, கஞ்சாவை இல்லாதொழித்தனர் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பின்தங்கிய பாடசாலைகளுக்கு கணினி இணைய வசதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த போது நிறைவேற்ற முடியாமல் போனது.

எனினும் ஜனாதிபதியாக அவர் இதனை மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சித்துள்ளமை சிறந்த விடயம். அன்று பின்தங்கிய பாடசாலைகளுக்கு கணினி இணைய வசதிகளை வழங்கியிருந்தால், கோவிட் காலத்தில் மாணவர்கள் சிறப்பாக கல்வி கற்றிருப்பார்கள்.

த்ரைலோக விஜய பத்ர (கஞ்சா) ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியமையும் சிறந்தது. கஞ்சா இலங்கையின் கலாசாரம். வெள்ளையர்கள் புகையிலை அறிமுகம் செய்து, கஞ்சாவை இல்லாதொழித்தனர்.

புகையிலை எவரும் பயன்படுத்தவில்லை என்பதால், வெள்ளையர்கள் கஞ்சாவை தடை செய்தனர். கஞ்சாவில் மருந்துகளை தயாரித்து ஏற்றுமதி செய்யலாம். இதன் மூலம் வருடாந்தம் பெரும் வருவாயை ஈட்ட முடியும் - என்றார்.

தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.